www.Padasalai.Net www.CBSEtips.in

லொயோலா

# ஈசி தமிழ்

# 6

## பருவம் - 1, 2 & 3

புதிய பாடத்திட்டத்தின் படி
விடைக்குறிப்பு (Key) அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்

www.Padasalai.Net

லொயோலா
பப்ளிகேஷன்ஸ்
விவேக் இல்லம் 19, ராஜ் நகர், N.G.O. 'A' காலனி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 007.
போன் : 0462 - 2553186
செல் : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹.240

Less Strain Score More

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## நூலாக்கம்

லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

நூலாசிரியர்கள் :

திருமதி. **S. வர்கீஸ் மேரி**
தமிழாசிரியை (பணி நிறைவு)
தூய இஞ்ஞாசிரியர் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை

திரு. **ச. சேசுராஜ் M.A., M.Ed.,**
தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை

திரு. **ம. வின்செண்ட் M.A., M.Ed.,**
பாளையங்கோட்டை.

**லொயோலா பப்ளிகேஷன்ஸ்**

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# அணிந்துரை

என்னருமை மாணவச் சகோதரமே! ‘தமிழைத் தேன்’ என எண்ணிச் சுவைப்பது தான் தமிழுக்கு நாம் செய்யும் சிறப்பான தொண்டாகும்.

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல, எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும் கூட. அதே போன்று உங்கள் கைகளில் தவழும் லொயோலோ ஈசி தமிழ் உரை நூல் உங்கள் மனதிற்கு இதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

புதிய பாடத்திட்டம் மதிப்பெண்களுக்காக மட்டுமல்ல, வேலைவாய்ப்பையும் பெற்றுத் தரக்கூடிய நிலையில் மிகவும் தரமான, வளமான கருத்துக்களைக் கொண்டு அமைந்துள்ளது. வாழ்க்கையை வளப்படுத்தும் பாடத்திட்டங்கள் தமிழ் ஏட்டில் சிறப்பாக அமைந்துள்ளன. தமிழில் நீங்கள் அதிக மதிப்பெண்களை அள்ளிக்குவிக்க ஈசியான வழி, இதோ

- ❖ எளிய இனிய மொழிநடை
- ❖ கருத்துகளின் கோர்வையான அழகு
- ❖ மனதில் பதியும் உள் தலைப்புகள்
- ❖ தமிழறிவை வளர்க்கும் பல்வகைச் சிந்தனைத் துளிகள்
- ❖ கற்பவை கற்றபின் மனதில் அணிவகுப்பு
- ❖ மதிப்பீட்டு வினாக்கள்

**அன்புடன்**

**Loyola Publication**

**குறிப்பு :** **Loyola Ec** புத்தகங்களை 10, 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவ மாணவிகள் வாங்கிப் பயின்றால், அரசுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று உச்சத்தைத் தொடலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்

## பருவம் - 1


| வ. எண் | பொருண்மை/இயல் | பாடம் | பக்கம் |
|---|---|---|---|
| இயல் - 1 | மொழி<br>தமிழ்த்தேன் | மனப்பாடப்பகுதி | 64 |
| | | இன்பத்தமிழ்* | 7 |
| | | தமிழுக்கும்மி | 10 |
| | | வளர்தமிழ் | 13 |
| | | கனவு பலித்தது | 17 |
| | | தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும் | 19 |
| இயல் - 2 | இயற்கை<br>இயற்கை இன்பம் | சிலப்பதிகாரம்* | 24 |
| | | காணி நிலம்* | 28 |
| | | சிறகின் ஓசை | 30 |
| | | கிழவனும் கடலும் | 35 |
| | | முதலெழுத்தும் சார்பெழுத்தும் | 37 |
| | | திருக்குறள்* | 43 |
| இயல் - 3 | அறிவியல், தொழில் நுட்பம்<br>எந்திர உலகம் | அறிவியல் ஆத்திசூடி | 46 |
| | | அறிவியலால் ஆள்வோம் | 49 |
| | | கணியனின் நண்பன் | 52 |
| | | ஒளி பிறந்தது | 56 |
| | | மொழிமுதல், இறுதி எழுத்துகள் | 59 |




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்

## பருவம் - 2


| பாடம் எண் | பாடம் | பக்கம் |
|---|---|---|
| இயல் - 1 | **மனப்பாடப்பகுதி** | 68 |
| | மூதுரை | 69 |
| | துன்பம் வெல்லும் கல்வி | 72 |
| | கல்விக்கண் திறந்தவர் - காமராசர் | 76 |
| | நூலகம் நோக்கி... | 79 |
| | இன எழுத்துகள் | 82 |
| இயல் - 2 | ஆசாரக்கோவை | 88 |
| | கண்மணியே கண்ணுறங்கு | 92 |
| | தமிழர் பெருவிழா | 96 |
| | மனம் கவரும் மாமல்லபுரம் | 100 |
| | மயங்கொலிகள் | 102 |
| | திருக்குறள் | 108 |
| இயல் - 3 | நானிலம் படைத்தவன் | 113 |
| | கடலோடு விளையாடு | 117 |
| | வளரும் வணிகம் | 121 |
| | உழைப்பே மூலதனம் | 126 |
| | சுட்டெழுத்துகள், வினா எழுத்துகள் | 129 |




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்

## பருவம் - 3



| பாடம் எண் | பாடம் | பக்கம் |
|---|---|---|
| இயல் - 1 | **மனப்பாடப்பகுதி** | 136 |
| | பாரதம் அன்றைய நாற்றங்கால் | 137 |
| | தமிழ்நாட்டில் காந்தி | 143 |
| | வேலுநாச்சியார் | 148 |
| | நால்வகைச் சொற்கள் | 149 |
| இயல் - 2 | பராபரக்கண்ணி | 156 |
| | நீங்கள் நல்லவர் | 159 |
| | பசிப்பிணி போக்கிய பாவை | 163 |
| | பாதம் | 166 |
| | பெயர்ச்சொல் | 168 |
| | திருக்குறள் | 176 |
| இயல் - 3 | ஆசிய ஜோதி | 179 |
| | மனித நேயம் | 183 |
| | முடிவில் ஒரு தொடக்கம் | 187 |
| | அணி இலக்கணம் | 188 |
| | **கூடுதல் வினா கட்டுரை** | **193** |



www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பருவம் - 1

## இயல் 1

### கவிதைப்பேழை

## இன்பத்தமிழ்

**நூற்குறிப்பு:**

இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களுள் இதுவும் ஒன்று. தாய்மொழியாகிய தமிழ் மொழியில், 'தமிழ் வணக்கம்' தற்கால இலக்கிய மரபு '**இன்பத்தமிழ்**' என்ற கவிதைப் பேழையில் ஆசிரியர் **பாரதிதாசன்** தமிழைப் பலவிதப் பெயர்களைச் சூட்டிப் பாராட்டி மகிழ்கிறார். இதனைக் கற்று நாமும் செந்தமிழ் இன்பம் காண்போம்.

**ஆசிரியர் குறிப்பு**

ஆசிரியர் - பாரதிதாசன்

இயற்பெயர் - சுப்புரத்தினம்

**பெயரின் சிறப்பு:**

பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைத் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.

**கவிதைகள் சில:**

பெண் கல்வி, கைம்பெண், மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு முதலான புரட்சிக் கருத்துகளை உள்வாங்கிப் பாடியுள்ளார். எனவே, இவர் '**புரட்சிக்கவி**' என்று போற்றப் படுகிறார் இவரைப் '**பாவேந்தர்**' என்றும் போற்றுவர்.

### தொகுதி – I

**ஒரு மதிப்பெண் வினாக்கள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஏற்றத் தாழ்வற்ற __________ அமைய வேண்டும் .
அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு
**விடை: அ) சமூகம்**

2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு __________ ஆக இருக்கும்.
அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி
**விடை: ஈ) அசதி**

3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் __________ .
அ) நிலயென்று ஆ) நிலவென்று இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று
**விடை: ஆ) நிலவென்று**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________ .
அ) தமிழங்கள் ஆ) தமிழெங்கள் இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள்

**விடை: ஆ) தமிழெங்கள்**

5. அமுதென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று

**விடை: ஆ) அமுது + என்று**

6. செம்பயிர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________ .
அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர் இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர்

**விடை: அ) செம்மை + பயிர்**

## II. சொல்லும் பொருளும்

விளைவு - விளைச்சல்
நிருமித்த - உருவாக்கிய
சமூகம் - மக்கள் குழு
அசதி - சோர்வு
நிலவு - சந்திரன்
புகழ் - பெருமை

## III. இன்பத் தமிழ் – பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக.

**விடை**

அ) விளைவுக்கு - பால் நீர்
ஆ) அறிவுக்கு - வேல் தோள்
இ) இளமைக்கு - நீர் பால்
ஈ) புலவர்க்கு - தோள் வேல்

## IV. ஒத்த ஓசையில் முடியும் (இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.

(எ.கா) பேர் - நேர்
நீர் - ஊர்
மணம் - குணம்
இளமை - வளமை
வாழ்வு - தாழ்வு
புகழ் - இகழ்
வான் - தேன்
வாள் - தேள்

## V. பிரித்து எழுதுக

அமுதென்று - அமுது + என்று
நிலவென்று - நிலவு + என்று
மணமென்று - மணம் + என்று

## VI. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 'இன்பத் தமிழ்' கவிதையின் ஆசிரியர் ________. **விடை: பாரதிதாசன்**
2. பாரதிதாசனின் இயற்பெயர் ________. **விடை: கனகசுப்புரத்தினம்**
3. ________ என்றும் ________ என்றும் பாரதிதாசன் போற்றப்படுகிறார்.
**விடை: புரட்சிக்கவிஞர், பாவேந்தர்**
4. அறிவுக்குத் துணை கொடுக்கும் தோள் போன்றது ________. **விடை: தமிழ்மொழி**

## தொகுதி – II

### VII. குறுவினா – பாட வினாக்கள்

1. **பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?**
அமுது, நிலவு, மணம், பால், வான், தோள் - இவைகளே பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்களாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?**

தமிழை நான், பெற்று வளர்த்துப் பாலூட்டி, சீராட்டித் தாலாட்டி வளர்க்கும் 'தாய்க்கு' ஒப்பிடுவேன்.

## VIII. சிறு வினா

**1. இன்பத்தமிழ் – பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.**

"தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்".

**2. சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?**

எந்த ஒரு பயிர் விளைச்சலுக்கும் அடிப்படைத் தேவையானது நீர்தான். நீரின்றி விளைச்சல் இல்லை. இதுவே இவற்றின் தொடர்பாகும்.

## IX. நெடுவினா – கூடுதல் வினா

**1. 'இன்பத் தமிழ்' – கவிதைப் பேழையில் கவிஞர் பாரதிதாசன் கூறும் செய்திகளைக் கூறுக.**

- இனிமையான அமுதம் போன்று தமிழும் இனிமையானது; அத்தகைய இன்பம் தரும் தமிழ் எங்கள் உயிருக்கு இணையானது.
- தமிழுக்கு நிலவென்று பெயர். இன்பத்தமிழ் எங்கள் சமூக வளர்ச்சிக்கு அடிப்படையான நீர் போன்றது.
- தமிழுக்கு மணம் என்று பெயர். அது எங்கள் வாழ்விற்காகவே உருவாக்கப்பட்ட ஊர் ஆகும்.
- தமிழ் எங்கள் இளமைக்குக் காரணமான பால் போன்றது. நல்ல புகழ் மிகுந்த புலவர்களுக்குக் கூர்மையான வேல் போன்ற கருவியாகும்.
- தமிழ் எங்கள் உயர்விற்கு எல்லையாகிய வானம் போன்றது. இன்பத்தமிழ் எங்கள் சோர்வை நீக்கி ஒளிரச் செய்யும் தேன் போன்றது.
- தமிழ் எங்கள் அறிவுக்குத் துணை கொடுக்கும் தோள் போன்றது. தமிழ் எங்கள் கவிதைக்கு வைரம் போன்ற உறுதிமிக்க வாள் ஆகும்.

## X. சிந்தனை வினா

**1. வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது?**

- வேல் - இந்துக்கடவுள் முருகனின் கையில் காணப்படும் தெய்வீக ஆயுதம்.
- வேல் - பகைவரை அழிக்கப் பயன்படுத்தும் ஆயுதம்.
- வேல் - தமிழர்கள் போரில் பயன்படுத்திய ஆயுதமும் (ஈட்டிபோன்றது)
- இது போல தமிழ் இலக்கியங்களில் கூறப்படுகின்ற கருத்தாழமிக்க கருத்துக்கள், மனித மனங்களில் காயத்தை ஏற்படுத்தும் தன்மை கொண்டது. பெண்கல்வி, கைம்பெண், மறுமணம், பகுத்தறிவு போன்ற புரட்சிகரமாக கருத்துகளை மென்சொற்களால் கூறினால் பொருள் எடுபடாது. எனவே கூர்மையான சொற்களைப் பயன்படுத்துகின்றனர் நம் கவிஞர்கள்.
- (எ.கா) சிலம்புக்காதையில், கண்ணகி பாண்டிய மன்னனை நோக்கி "தேரா மன்னா" என்று கூறிய வரிகளைக் காணலாம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 1

## கவிதைப்பேழை

## தமிழ்க்கும்மி

**நூற்குறிப்பு:**

தமிழ்க் கும்மி, பெருஞ்சித்திரனார் எனும் பாவலர் பாடியது. இது 'கனிச்சாறு' என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. இந்நூல் எட்டுத் தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது 'தமிழுணர்வு' நிறைந்த பாடல்களைக் கொண்டது.

**ஆசிரியர் குறிப்பு**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | பெருஞ்சித்திரனார் |
| இயற்பெயர் | - | மாணிக்கம் |
| சிறப்புப்பெயர் | - | பாவலரேறு |
| பெற்றோர் | - | துரைசாமி / குஞ்சம்மாள் |
| பிறப்பு | - | 10.03.1933 |
| மறைவு | - | 11.06.1995 |
| சிறப்பு | - | இவர் தனித்தமிழையும், தமிழுணர்வையும் பரப்பிய பாவலர். |
| நடத்திய இதழ்கள் | - | தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் |

**இயற்றிய நூல்கள்**

கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக் கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம்.

### தொகுதி – I

**ஒரு மதிப்பெண் வினா – பாட வினாக்கள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தாய் மொழியில் படித்தால் __________ அடையலாம் .

அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை

**விடை: ஆ) மேன்மை**

2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் __________ சுருங்கிவிட்டது.

அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று

**விடை: அ) மேதினி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. ‘செந்தமிழ்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________ .

அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ் இ) சென்மை + தமிழ் ஈ) செம்மை + தமிழ்

**விடை: ஈ) செம்மை + தமிழ்**

4. ‘பொய்யகற்றும்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________ .

அ) பொய் + அகற்றும் ஆ) பொய் + கற்றும்

இ) பொய்ய + கற்றும் ஈ) பொய் + யகற்றும்

**விடை: அ) பொய் + அகற்றும்**

5. பாட்டு + இருக்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் __________ .

அ) பாட்டிருக்கும் ஆ) பாட்டுருக்கும் இ) பாடிருக்கும் ஈ) பாடியிருக்கும்

**விடை: ஆ) பாட்டிருக்கும்**

6. எட்டு + திசை என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் __________ .

அ) எட்டுத்திசை ஆ)எட்டிதிசை இ)எட்டுதிசை ஈ) எட்டிஇசை

**விடை: அ) எட்டுத்திசை**

## II. சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| ஆழிப் பெருக்கு | கடல்கோள் | பூட்டு | பிணிப்பு |
| ஊழி | நீண்டதொரு காலப்பகுதி | மெய் | உண்மை |
| கோதையர் | பெண்கள் | மேதினி | உலகம் |
| இளங்கோதையர் | இளமையான பெண்கள் | உள்ளப்பூட்டு | அறிய விரும்பாமை |
| | | மேன்மை | சிறப்பு |

## III. பிரித்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| செந்தமிழ் | செம்மை + தமிழ் | பூட்டறுக்கும் | பூட்டு + அறுக்கும் |
| ஊற்றெனும் | ஊற்று + எனும் | பாட்டிருக்கும் | பாட்டு + இருக்கும் |

## IV. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தமிழ்க் கும்மி - கவிதைப் பேழையின் ஆசிரியர் __________. **விடை: பெருஞ்சித்திரனார்**
2. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் __________. **விடை: மாணிக்கம்**
3. ‘பாவலரேறு’ என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர் ...... **விடை:பெருஞ்சித்திரனார்**
4. ‘தமிழ்க் கும்மி’ இடம் பெற்றுள்ள நூல் __________. **விடை: கனிச்சாறு**

## V. பொருத்துக

| | | | விடைகள் |
|---|---|---|---|
| அ) | வாயாரப் | - ஆடலாம் | பேசலாம் |
| ஆ) | காதாரக் | - பாடலாம் | கேட்கலாம் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | | | |
|---|---|---|---|---|
| இ) | இசையோடு | - | கேட்கலாம் | பாடலாம் |
| ஈ) | கும்மி கொட்டி | - | பேசலாம் | ஆடலாம் |

## VI. நயம் உணர்ந்து எழுதுக.

**1. பாடல் அடிகளில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களை எடுத்து எழுதுக. செய்யுளின் அடிகளிலோ சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றிவருவது மோனையாகும்.**

கொட்டுங்கடி, கொட்டுங்கடி — எட்டுத்திசை, எட்டிடவே

ஊழி, ஊற்று — நூறு, நூல்

**2. பாடல் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் (எதுகை) சொற்களை எடுத்து எழுதுக.**
**செய்யுளின் அடிகளிலோ சீர்களிலோ இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை–யாகும்.**

கொட்டு, எட்டு, பூட்டு, பாட்டு, கிட்டும், காட்டும்

ஊழி, ஆழி

கண்டது, கொண்டது, பூண்டவர்.

**3. பாடல் அடிகளில் இறுதி எழுத்து ஒன்று போல் வரும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.**

பாடலில் இறுதி எழுத்து ஒன்றுபோல் அமைக்கப்பெறுவது இயைபு நயமாகும்.

கொட்டுங்கடி, கொட்டுங்கடி, சொட்டுங்கடி,

பூட்டறுக்கும், பாட்டிருக்கும், காட்டிருக்கும்

கண்டதுவாம், கொண்டதுவாம், நின்றதுவாம்

## தொகுதி – II

### VII. குறு வினா – பாட வினாக்கள்

**1. தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

- பொய்யை அகற்றும் மொழி.
- அது மனத்தின் அறியாமையை அகற்றி, உயிர் போன்ற உண்மையை ஊட்டி.
- உயர்ந்த அறத்தைத் தந்து உலகம் சிறந்துவாழ நல்ல வழி காட்டும்.

**2. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?**

செந்தமிழின் புகழ் எட்டுத் திசைகளிலும் பரவிடும் வகை செய்தல் வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

## கூடுதல்வினா

**1. ஐம்பூதங்கள் எவை?**

வான், வளி, நெருப்பு, மண், நீர் ஆகியன ஐம்பூதங்கள் ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## VIII. சிறுவினா

**1. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?**

- பல நூறு ஆண்டுகளைக் கடந்து நிற்பது தமிழ்மொழி கடல்கோள் காலமாற்றங்கள் எவற்றாலும் அழியாமல் என்றும் இளமையோடு திகழ்கிறது தமிழ்மொழி.
- அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்ட மொழி தமிழ்.

**2. தமிழ்க் கும்மி பாடலின்வழி நீங்கள் அறிந்துகொண்டவற்றை உம் சொந்த நடையில் எழுதுக.**

- இளம் பெண்கள் தமிழ் மொழியின் புகழ், சிறப்புகளைச் சொல்லிச் சொல்லி ஆடிப் பாடிக் கும்மியடித்து மகிழ்வர்.
- தமிழின் புகழ் எட்டுத் திசைகளிலும் பரவிடும் வகை செய்ய வேண்டும்.
- பல நூறு ஆண்டுகளைக் கண்ட தமிழ்மொழியில், அறிவு ஊற்றாகிய நூல்கள் பல உள்ளன.
- பெரும் கடல் சீற்றம், காலமாற்றம் - இவற்றால் அழியாதது நம் தமிழ் மொழி.
- பொய்யை அகற்றி, மனத்தின் அறியாமையை நீக்கி, பலர் எழுதிய பாடல்களால் நிறைந்தது தமிழ்மொழி
- உயிர் போன்ற உண்மையை ஊட்டி, உயர்ந்த அறத்தைத் தந்து இந்த உலகம் சிறந்து வாழ நல்வழி காட்டுகின்றது தமிழ்மொழி.

## IX. சிந்தனை வினா (பாட வினா)

**1. 'தமிழ் மொழி அறியாமையை எவ்வாறு அகற்றும்?**

உள்ளத்தின் பொய் அகற்றி, உண்மையை ஊட்டுவதால் அறியாமை இருளை அகற்றும்.

# இயல் 1

## உரைநடை உலகம்

# வளர்தமிழ்

## தொகுதி – I

### ஒரு மதிப்பெண் வினா – பாட வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் ___________ .

அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை

**விடை: ஆ) பழமை**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. ‘இடப்புறம்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.
அ) இடன் + புறம் ஆ) இடது + புறம் இ) இடம் + புறம் ஈ) இடப் + புறம்

**விடை: ஆ) இடது + புறம்**

3. ‘சீரிளமை’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.
அ) சிறு + இளமை ஆ) சீர்மை + இளமை இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை

**விடை: அ) சீர் + இளமை**

4. சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் __________ .
அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம் இ) சிலம்புதிகாரம் ஈ) சில பதிகாரம்

**விடை: ஆ) சிலப்பதிகாரம்**

5. கணினி + தமிழ் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் __________.
அ) கணினிதமிழ் ஆ) கணினித்தமிழ் இ) கணிணிதமிழ் ஈ)கனினிதமிழ்

**விடை: ஆ) கணினித்தமிழ்**

6. “தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று பாடியவர் __________ .
அ) கண்ணதாசன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன்

**விடை: ஆ) பாரதியார்**

7. “மா” என்னும் சொல்லின் பொருள் __________ .
அ) மாடம் ஆ) வானம் இ) விலங்கு ஈ) அம்மா

**விடை: இ) விலங்கு**

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது __________. **விடை: மொழி**
2. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் __________.
**விடை: தொல்காப்பியம்**
3. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது __________ அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும். **விடை: எண்களின்**

## III. சொற்களைச் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக.

1. தனிச்சிறப்பு - தமிழ் இலக்கணம் தனிச் சிறப்பு வாய்ந்தது
2. நாள்தோறும் - நாள்தோறும் நாம் உடற்பயிற்சி செய்வது நல்லது

## IV. பிரித்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காலத்திற்கேற்ப | - | காலத்திற்கு + ஏற்ப | இதற்கேற்ப | - | இதற்கு + ஏற்ப |
| கண்டறிந்த | - | கண்டு + அறிந்த | சொற்சிறப்பு | - | சொல் + சிறப்பு |
| யாமறிந்த | - | யாம் + அறிந்த | பெயரிடுவதிலும் | - | பெயர் + இடுவதிலும் |
| இனிதாவது | - | இனிது + ஆவது | பங்காற்ற | - | பங்கு + ஆற்ற |
| அதற்குரிய | - | அதற்கு + உரிய | | | |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## V. சேர்த்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| என்று + உணராத | - | என்றுணராத | வேறு + வேறு | - | வெவ்வேறு |
| மூன்று + தமிழ் | - | முத்தமிழ் | இ + மொழி | - | இம்மொழி |

## தொகுதி – II

## VI. குறு வினா – பாட வினாக்கள்

**1. தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?**

➢ தமிழ்மொழி உலக மொழிகள் பலவற்றிலும் முதன்மையானது.

➢ இலக்கியம் தோன்றிய பிறகே இலக்கணம் தோன்றியிருக்க வேண்டும்.

➢ தொல்காப்பியம் மிகப்பழமையான இலக்கண நூல் - இதற்கும் முன்பே இலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும்.

➢ இதனால் தமிழ் மிகவும் தொன்மையான மூத்த மொழி என்பதை உணரலாம்.

**2. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணி.

## VII. சிறுவினா

**1. அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?**

**அஃறிணை:** உயர்திணை, அஃறிணை என இருவகைத் திணைகளை அறிவோம். உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என அமைய வேண்டும். ஆனால் தாழ்திணை என்று கூறாமல் அஃறிணை (அல் + திணை = <u>உயர்வு அல்லாத திணை</u>) என்று பெயரிட்டனர் நம் முன்னோர்.

**பாகற்காய்:** இது கசப்புச்சுவை உடையது. அதனைக் கசப்புக் காய் என்று கூறாமல், இனிப்பு அல்லாத காய் பாகற்காய் (பாகு + அல் + காய்) என வழங்கினர்.

**2. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.**

➢ நினைக்கும் போதே நெஞ்சில் இனிப்பது, காரணம் தமிழ் இலக்கியங்கள் பலவும் இனிமையானவை.

➢ ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை.

➢ பல மொழிகள் கற்ற கவிஞர் <u>பாரதியார்</u>, “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் <u>இனி-தாவது</u> எங்கும் காணோம்” என்று தமிழ் மொழியின் இனிமையை வியந்து பாடுகிறார்.

**3. தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.**

➢ தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை; தொன்மையானது;

➢ பேசவும் படிக்கவும் எழுதவும் உகந்த மொழி; ஒலிவடிவம் - வரிவடிவம் உடையது.

➢ தமிழ் எழுத்துகள் வலஞ்சுழி எழுத்துகளைச் சிறப்பாகக் கொண்டது. இனிய - சீர்மை மிகுந்த மொழி.

## VIII. நெடுவினா

**1. வளமை மொழி, புதுமை மொழி – இவற்றை நும் பாடப் பகுதி கொண்டு விளக்குக.**

**வளமை மொழி**

➢ தமிழ் வளமை மிக்க மொழி; தொல்காப்பியம், நன்னூல் உள்ளிட்ட இலக்கண நூல்கள் மிகுந்தது தமிழ்மொழி.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்க இலக்கியங்களைக் கொண்டது.
- திருக்குறள், நாலடியார் முதலிய அறநூல்கள் பலவும் நிறைந்தது.
- சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களைக் கொண்டது.
- சொல்வளம் மிக்கது. ஒரு பொருளின் பலநிலைகளுக்கும் வெவ்வேறு பெயர் சூட்டுவது தமிழ் மொழியின் சிறப்பாகும்.

  சான்றாக, தோன்றுவது முதல் உதிர்வது வரை பூவின் ஏழு நிலைகளுக்கும் தனித்தனிப் பெயர்கள் தமிழில் உண்டு.

  முகை, மொட்டு, அரும்பு, செம்மல், வீ, அலர், மலர்
- ஓர் எழுத்தே ஒரு சொல்லாகிப் பொருள் தருவதும் உண்டு. ஒரு சொல் பல பொருளைக் குறித்து வருவது உண்டு.
- சான்றாக - 'மா' என்னும் ஒரு சொல் மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு, போன்ற பல பொருள்களைத் தருகிறது.

**புதுமை மொழி**

- இன்றைய அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்பத் தமிழில் புதிய புதிய கலைச் சொற்கள் உருவாகி வருகின்றன.
- சான்றாக இணையம், முகநூல், புலனம், குரல்தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை - போன்றவை
- சமூக ஊடகங்களான செய்தித்தாள், தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றிலும் பயன்படத்-தக்க மொழியாகவும் விளங்குகிறது.

## IX. சிந்தனை வினா

**1. தமிழ் மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்து யாது?**

உயிரும் மெய்யும் இணைவதால் மெய் ஒலிகள் தோன்றுபவை உயிர்மெய் ஒலிகள் உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால் உயர்மெய் எழுத்துகளை எளிதாக ஒலிக்கலாம். எழுத்துகளைக்கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழ்ந்து விடும்.

(**எ.கா**) அ + மு + து = அமுது

தமிழ் மொழியை எழுதும் முறையும் மிக எளிதுதான். இதற்கேற்ப தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன.

(**எ.கா**) வலஞ்சுழி எழுத்துகள் - அ, எ, ஔ, ண, ஞ

இடஞ்சுழி எழுத்துகள் - ட, ய, ழ

**2. தமிழ் மொழி வளர்மொழி என்பதை உணர்கிறீர்களா? காரணம் தருக.**

தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்புப்பெயரும் உண்டு. இயல் தமிழ் - எண்ணத்தை வெளிப்படுத்தும்; இசைத்தமிழ் உள்ளதை மகிழ்விக்கும்; நாடகத்தமிழ் உணர்வில் கலந்து வாழ்வை நல்வழிப்படுத்தும்.

தமிழில் காலந்தோறும் பலவகை இலக்கிய வடிவங்கள் அரங்கேறியிருக்கின்றன. புதிய புதிதாக உருவாகித் துளிப்பா, புதுக் கவிதை - போன்ற கவிதை வடிவங்களும், கட்டுரை, புதினம், சிறுகதை போன்ற உரைநடைகளும், தற்போது அறிவியல் தமிழ், கணினித் தமிழ், என்று இணையத் தமிழ் மேலும் மேலும் வளர்ந்துக் கொண்டே வருகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 1

## விரிவானம்

## கனவு பலித்தது - கடிதம்

### I. நெடு வினா (பாட வினா)

**1. அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.**

**கடிதச் சுருக்கம்:**

தாய்மொழியில் படித்தவர்களும் சாதனையாளர்களாக உள்ளனர். சாதனைக்கு மொழி ஒரு தடையே இல்லை. நீண்ட காலமாக அறிவியல் சிந்தனைகளோடு விளங்கியவர்கள் தமிழர்கள். தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் பல காணப்படுகின்றன.

'நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் ஐந்தும் கலந்தது இவ்வுலகம்' என்பது அறிவியல் உண்மை. தொல்காப்பியர் தம் தொல்காப்பியம் என்னும் நூலில் இக்கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். உலக உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தியும் உள்ளார்.

கடல்நீர் ஆவியாகி மேகமாகும். பின்னர் மேகம் குளிர்ந்து மழையாகப் பொழியும். இந்தச் செய்தியைப் பழந்தமிழ் இலக்கியங்களான முல்லைப்பாட்டு, பரிபாடல், திருக்குறள், கார்நாற்பது, திருப்பாவை முதலிய நூல்களில் காணலாம். திரவப் பொருள்களை எவ்வளவு அழுத்தினாலும் அவற்றின் அளவைச் சுருக்க முடியாது என்ற அறிவியல் கருத்து

"ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நால் நாழி", என ஔவையார் பாடலில் கூறப்பட்டுள்ளது.

போர்க்களத்தில் மார்பில் புண்படுவது இயல்பு. வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி பதிற்றுப்பத்து நூலில் இடம் பெற்றுள்ளது.

**(எ.கா)** "நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு".. பதிற்றுப்பத்து

சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை, நரம்பினால் தைத்த செய்தியும் நற்றிணை என்னும் நூலில் காணப்படுகிறது. முற்கால இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறுவை மருத்துவம் வியப்பளிக்கிறது.

தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்வதை அறிவியல் அறிஞர் கலீலியோ கூறினார். இது திருவள்ளுவமாலை எனும் நூலில் கபிலர் எழுதிய பாடலில்
"தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும்".

நமது ஊர்நூலகம் உனக்கு உதவியாக இருக்கும், நூல்வாசிப்பு உன் சிந்தனைக்கு வளம் சேர்க்கும். தொடர்ந்து முயற்சி செய். நீ வெல்வாய் என அத்தை கடிதம் வழி வாழ்த்தினாள்.

### கற்பவை கற்றபின்

**1. இக்கடிதத்திற்கு நீங்கள் விரும்பும் வகையில் வேறொரு தலைப்பிடுக.**

எண்ணம் ஈடேறியது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. உங்கள் எதிர்காலக் கனவு குறித்து ஒரு கடிதம் எழுதுக..**

மாணவர்களை தமிழில் ‘உங்கள் எதிர்கால கனவு’ குறித்து ஒரு கடிதம் எழுதச் செய்தல்.

இடம் : மதுரை
நாள் : 05-06-2022

அன்புள்ள மாமா,

நான் இங்கு நலமாக இருக்கிறேன். நீங்கள் அங்கு நலமாக உள்ளீர்களா? உங்களின் அறிவுரைகளின் படியும் வழிகாட்டுதலின்படியும் நான் இன்று அறிவியல் துறையில் சிறந்து விளங்குகின்றேன்.

என் எதிர்காலக் கனவு நனவாவதற்கு என்னால் ஆன முயற்சிகளை மேற்கொள்வேன். என் உயர்வும் உழைப்பும் நாட்டை உயர்த்துவதாக இருக்கும். என் இலட்சியப் பாதை மிகவும் சிறப்பானதாக அமையும். பத்துப் பேரோடு பதினொன்றாவது நபராக நான் இருக்கமாட்டேன். என் கடமையை உயிரென மேற்கொண்டு சாதனை புரிவேன்.

என்னுடைய அறிவியல் ஆய்வு மற்ற வல்லரசு நாடுகளுடன் போட்டியிடுவதாக இருக்காது. நம் நாட்டில் அழிவின் விளிம்பில் இருக்கும் விவசாயத்திற்கு உதவும் வகையில் இருக்கும் நாட்டின் முதுகெலும்பு கிராமங்கள், அக்கிராமங்களின் முதுகெலும்பு இளைஞர்கள், அவர்களுள் ஆர்வமுள்ள கிராமப்புற இளைஞர்களைக் கூட்டி விழிப்புணர்வூட்டி வேளாண்துறை மேம்படச் செய்வேன்.

மழைநீரைச் சேமிக்கவும், புதிய விவசாய உத்திகளைப் பயன்படுத்தி குறைந்த நாட்களில் மகத்தான விளைச்சலை உருவாக்குவேன். வேளாண் பணிக்கான புதிய எந்திரங்களைக் கண்டறிவேன். அவற்றால் சுற்றுச்சூழல் பாதிப்படையாதபடிப் பார்த்துக் கொள்வேன்.

நம்நாடு வறுமை, பஞ்சம், பிணிபோக்கி செழுமை, வளமை, பொருளாதார முன்னேற்றம் தொழில்வளம் செழிக்க அறிவியலின் வழி நின்று பாடுபடுவேன். மேலும் வேறென்ன செய்யலாம் என்பதை நீங்கள் அவ்வப்போது கூறுங்கள்.

இப்படிக்கு
தங்கள் அன்புக்குரிய,
கு.செந்தில்

உறைமேல் முகவரி :

திரு.அ.குமார் அவர்கள்,
எண்.7, அம்மன் கோயில் தெரு
அடையார், சென்னை - 600 020

**3. இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?**

இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக அமைந்தவை அவளுடைய அத்தை நறுமுகையின் நம்பிக்கையூட்டலும், நல்வழிகாட்டுதலும். பள்ளிப் பருவக் கனவுகளுக்கு வடிகாலாக அமைந்தவை அவளுடைய அத்தையின் கடிதச் செய்திகள். கனவுகளுக்கு அவை உரம் ஊட்டின. அக்கடிதங்கள் அறிவுக் கருவூலங்களாக அமைந்தன. இன்சுவையின் உயர்வுக்கும் அவை பயன்பட்டன. இலக்கியங்கள் வாயிலாக வழிகாட்டிய அறிவியல் செய்திகள் அவளை இளம் அறிவியல் ஆய்வாளர் பணிக்குத் தெரிவு செய்யப்பட உறுதுணையாக, ஊன்றுகோலாக அமைந்தன. அவளின் ஐயம் தீர்த்து, ஊக்கம் ஊட்டியது அத்தையின் பதில் கடிதம் தான். தமிழாலும் எத்துறையிலும் முயன்றால் சாதிக்க முடியும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. ‘கனவு பலித்தது’ என்ற தலைப்பு இக்கடிதத்திற்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதனை விளக்குக.**

இன்சுவையின் பள்ளிப் பருவக் கனவு நனவாகி விட்டது. காரணம் இளம் அறிவியல் ஆய்வாளர் பணிக்குத் தெரிவு. சதீஸ்வான் விண்வெளி ஆய்வு நிறுவனப் பணிக்குச் சேருமாறு இன்சுவை தெரிவு செய்யப்பட்டுள்ளாள். அவள் ஆறாம் வகுப்பு மாணவியாக இருக்கும்போது தனது அத்தையைப் போல அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டும் என்ற விருப்பம். அரசுப் பள்ளியில் படித்தால் சாதிக்க முடியும் என்பதையும், தமிழில் படித்து அறிவியல் அறிஞர் ஆகலாம் என்ற தன்னம்பிக்கையும் ’கனவு பலித்திட’ப் பாதை காட்டியது. இன்சுவையின் கனவு பலித்திட உரம் ஊட்டியவை - தனது அத்தையின் கடிதங்கள்; அவற்றை அறிவுக் கருவூலங்களாகப் பாதுகாத்துப் படித்து உயர்ந்தாள் இன்சுவை.

# இயல் 1

## கற்கண்டு
## தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்

### தொகுதி – I

**ஒரு மதிப்பெண் வினா – பாட வினாக்கள்**

### I. கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச் சொற்களை எழுதுக.

1. உயிரெழுத்தில் தொடங்கும் இரண்டு மாத்திரை அளவுள்ள சொல் ________. **விடை: ஔ**
2. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச்சொல் ________. **விடை: ஈ**
3. ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல் ______. **விடை: அஃது**

### II. சரியான விடையைத் தேர்ந்தெழுதுக

1. பழமொழியின் சிறப்பு __________ சொல்வது.
   அ) விரிவாகச் ஆ) சுருங்கச் இ) பழமையைச் ஈ) பலமொழிகளில்
   **விடை: ஆ) சுருங்கச்**
2. பழந்தமிழ் இலக்கணநூல் ____________.
   அ) தொல்காப்பியம் ஆ) அகத்தியம் இ) நன்னூல் ஈ) வீரசோழியம்
   **விடை: அ) தொல்காப்பியம்**
3. தமிழ் மொழி இலக்கணம் __________ வகைப்படும்.
   அ) பத்து ஆ) ஐந்து இ) முப்பது ஈ) மூன்று
   **விடை: ஆ) ஐந்து**
4. உயிருக்கு முதன்மையானது __________ .
   அ) காற்று ஆ) உணவு இ) சுவாசித்தல் ஈ) ஒய்வு
   **விடை: அ) காற்று**

### III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மொழியைப் பேச, எழுத வரையறை செய்தலே _________. **விடை: இலக்கணம்**
2. எழுத்துகளை ஒலிக்கும் கால அளவிற்கு _________ என்று பெயர். **விடை: மாத்திரை**
3. மெய் என்பது _________ எனப்பொருள்படும். **விடை: உடம்பு**
4. ஒளிவடிவாக எழுப்படுவதும், வரிவடிவாக எழுதப்படுவதும் ___எனப்படுகிறது. **விடை: எழுத்து**
5. ஆய்த எழுத்தை _________ என்று கூறுவர். **விடை: தனிநிலை**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## தொகுதி – II

### IV. குறு வினா – பாட வினாக்கள்

**1. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை

- எழுத்து இலக்கணம்
- சொல் இலக்கணம்
- பொருள் இலக்கணம்
- யாப்பு இலக்கணம்
- அணி இலக்கணம்

**2. மெய்யெழுத்துக்களை மூவகை இனங்களாக வகைப்பத்தி எழுதுக.**

- வல்லினம் - க், ச், ட், த், ப், ற்
- மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன்
- இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

**3. தமிழ் எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.**

- உயிர்க்குறில் - ஒரு மாத்திரை (அ, இ, உ, எ, ஒ)
- உயிர் நெடில் - இரு மாத்திரை (ஆ, ஈ, ஊ, ர, ஐ, ஓ, ஔ)
- மெய்யெழுத்து - ½ மாத்திரை (வல், மெல், இடை)
- குறுக்கம் - ¼ மாத்திரை

## கற்பவை கற்றபின்

உங்கள் பெயர் மற்றும் உங்கள் நண்பர்களது பெயர்களுக்கான மாத்திரை அளவை கண்டுபிடி.

எ.கா. கபிலர் - 1 + 1 + 1 + ½ = 3 ½

மாணவர்களைத் தமிழ் எழுத்துகளின் மாத்திரை அளவை அறிந்து கொள்ளச் செய்தல்.

| வ. எண் | பெயர் | மாத்திரை அளவு |
|---|---|---|
| 1. | அரவிந்தன் | 1 + 1 + 1+ ½ + 1 + ½ = 5 |
| 2. | அசுவின் | 1 + 1 + 1+ ½ = 3 ½ |
| 3. | செந்தாழினி | 1 + ½ + 2+ 1 + 1 = 5 ½ |
| 4. | ஆனந்த் | 2 + 1 + ½ + ½ = 4 |

## கூடுதல் வினாக்கள்

**1. உயிரெழுத்துகள் யாவை?**

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ. ஒ. ஓ, ஔ ஆகிய பன்னிரண்டும் உயிர் எழுத்துகள்.

**2. மெய்யெழுத்துகள் யாவை?**

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகள் ஆகும்.

**3. குறில், நெடில் எழுத்துகள் யாவை?**

அ, இ, உ, எ, ஒ - ஆகிய ஐந்தும் உயிர்க்குறில் எழுத்துகள்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - ஆகிய ஏழும் உயிர்நெடில் எழுத்துகள்.

**4. மாத்திரை என்றால் என்ன?**

மாத்திரை என்பது எழுத்துகளை ஒலிக்க ஆகும் கால அளவைக் குறிப்பது,

ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கவோ ஒருமுறை கை நொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**5. குறில், நெடில், மெய் எழுத்துகளின் மாத்திரை அளவு யாது?**

குறில் - 1 மாத்திரை; நெடில் - 2 மாத்திரை; மெய் - 1/2 மாத்திரை

**6. உயிர்மெய் எழுத்துகள் யாவை?**

**18 × 12 = 216** மெய் எழுத்துகள் பதினெட்டுடன் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றுபவை உயிர்மெய் எழுத்துகள் ஆகும்.

## மொழியை ஆள்வோம்!

### I. கேட்டும் பார்த்தும் உணர்க.

1. இனிய தமிழ்ப் பாடல்களைக் கேட்டு மகிழ்க.
2. தமிழறிஞர்களின் வானொலி, தொலைக்காட்சி உரைகளைக் கேட்டு மகிழ்க.

### II. கீழ்க்காணும் தலைப்பில் ஒரு நிமிடம் பேசுக.

**தமிழ் இனிது**

தமிழ் என்பதன் பொருள் இனிமை ஆகும். இயன்றவரை நற்சொல் கொண்டு பேசி நற்றமிழ் ஆனாய். பண்ணிசைத்து பாடுகையில் இசைத்தமிழ் ஆனாய்; இயல்பாகப் பேசுகையில் இயற்றமிழ் ஆனாய்; கூத்தாடிப் பாடும் போது நாடகத்தமிழ் என இனிமைத் தமிழாக வலம் வரும் தமிழ் மொழியே வாழ்க! வளர்க!!.

**தமிழ் எளிது**

உயிருக்கு உயிர் எழுத்தாகவும், மெய்க்கு மெய் எழுத்தாகவும், உலகுக்கு உயிர் மெய் எழுத்தாகவும் விளங்கி பிற மொழிகளிடம் இருந்து தனித்து நிற்கையில் தனித்தமிழாகவும் நின்று எளிய எளியமுறையில் ஒலிக்கச் செய்யும் 'எம் எளிய தமிழே' வாழ்க! வளர்க!!.

**தமிழ் புதிது**

பாவையில், ஏட்டில், பாட்டில், கற்பனையில், விற்பனையில், சேவையில், கலையில், சிலையில், அன்னைப்பாலில் எனப் புதிய பரிணாமங்களில் உருவாகிடும் தமிழே! உன் அள்ளிப் பருகினாலும், தின்று தீர்த்தாலும், தீராத திகட்டாத தெள்ளமுது. நம் புதுத்தமிழே நீ வாழ்க! வளர்க!!.

### III. சொல்லக் கேட்டு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| இன்பத்தமிழ் | தொல்காப்பியம் | சுப்புரத்தினம் | பன்னிரண்டு |
| பாவேந்தர் | அஃறிணை | செந்தமிழ் | ஆராய்ச்சியாளர் |
| உயிரினங்கள் | கருவூலங்கள் | | |

### IV. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக

விரிவான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக, **சுத்தம் சோறு போடும்** என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம். சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல்நலமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை இவ்விரிந்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

**1.** பழமொழியின் சிறப்பு __________ சொல்வது.

அ) விரிவாகச் ஆ) சுருங்கச் இ) பழைமையைச் ஈ) பல மொழிகளில்

**விடை: ஆ) சுருங்கச்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. நோயற்ற வாழ்வைத் தருவது ______________ **விடை: சுத்தம்.**

3. உடல்நலமே ______________ அடிப்படை **விடை: உழைப்புக்கு**

4. **உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன யாவை?**
உழைத்துத் தேடிய பொருளால் உண்ண உணவு, உடுக்க உடை, வாழ்வதற்கு உறைவிடம் ஆகியவற்றை பெறுகிறோம்

5. **பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.**
சுத்தம் சோறு போடும்

## V. அ) பிறமொழிக் கலப்பின்றிப் பேசுக.

1. எங்கள் **ஸ்கூல்லே** சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க.
**விடை :** எங்க **பள்ளியில்** சுற்றுலா அழைத்துக்கொண்டு போகிறார்கள்.

2. பெற்றோரிடம் **பர்மிசன் லெட்டர்** வாங்கி வரச் சொன்னாங்க.
**விடை:** பெற்றோரிடம் அனுமதிக்கடிதம் வாங்கி வரச் சொன்னார்கள்

## VI. ஆய்ந்தறிக.

1. **பெயரில் தலைப்பெழுத்தைப் பலவகையாக எழுதுகின்றோம்.**
S. இனியன், எஸ். இனியன், ச. இனியன் – இவற்றுள் சரியானது எது? ஏன்?
ச. இனியன் என்பதே மிகச் சரியான விடை. (இனியன் என்பது மாணவனின் பெயர். 'ச' என்பது இனியன் தகப்பனார் பெயர் சங்கர் எனவே ச. இனியன்) தமிழில் பெயர்களை எழுதும் போது தலையெழுத்தையும் தமிழிலே எழுத வேண்டும்.

## VII. கடிதம் எழுதுக.

**விடுப்பு விண்ணப்பம்**

**அனுப்புநர்**

ம. கதிரேசன்,
ஆறாம் வகுப்பு 'இ' பிரிவு,
தூய வளனார் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை

**பெறுநர்**

வகுப்பாசிரியர் அவர்கள்,
தூய வளனார் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை

ஐயா / அம்மா,

வணக்கம், என் அண்ணணின் திருமணம் 16.06.2019 அன்று நடைபெறுகிற காரணத்தால் எனக்கு அன்று ஒரு நாள் மட்டும் விடுப்பு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள மாணவன்
ம. கதிரேசன்

**இடம் :** பாளையங்கோட்டை
**நாள் :** 16.06.19

ந. ஆறுமுகம்
**பெற்றோர் கையொப்பம்**



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## VIII. மொழியோடு விளையாடு

**திரட்டுக :**

**1. மை என்னும் எழுத்தில் முடியும் சொற்களின் பட்டியல் தயாரிக்க.**

வளமை, புலமை, இனிமை, தனிமை, செழுமை, புதுமை, பசுமை

**சொல்வளம் பெறுவோம் :**

**1. கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.**

**(எ.கா)** கரும்பு - <u>கரு, கம்பு</u>

கவிதை - <u>கவி, கதை</u>

பதிற்றுப்பத்து - பத்து, பதிறு

பரிபாடல் - பரி, பாடல்

**2. இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

நூல் மொழி கோல் மீன் நீதி எழுது

கண் வெளி தமிழ் மணி மாலை விண்

**(எ.கா)** விண்மீன், எழுதுகோல், நீதிமொழி, நூல் எழுது, தமிழ் மொழி, மணிமாலை, கண்மணி, விண்வெளி, தமிழ்நூல், தமிழ்மணி

## IX. பொருத்தமான சொற்களைக் கொண்டு தொடர்களை நிரப்புக.

அழுகு, ஏற்றம், இன்பம், ஊக்கம், இனிமை, ஆற்றல், ஈடு, இசை, உணர்வு, ஏடுகள், உரிமை, என்றும், எளிதாய், உவகை, அன்பு.

**(எ.கா)** அன்பு - தருவது தமிழ்

ஆ - ஆற்றல் தருவது தமிழ்

இ - இன்பம் தருவது தமிழ்

ஈ - ஈடு இல்லாதது தமிழ்

உ - உவகை தருவது தமிழ்

ஊ - ஊக்கம் தருவது தமிழ்

எ - எங்கும் வேண்டும் தமிழ்

ஏ - ஏற்றம் தருவது தமிழ்

## X. கட்டங்களில் மறைந்துள்ள பெயர்களைக் கண்டுபிடிக்க.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | ர | தி | தா | ச | ன் | ச |
| ர | ம் | தா | ர் | ப | ம் | க |
| தி | ரு | வ | ள் | ளு | வ | ர் |
| யா | பா | தை | ஔ | வை | யா | ர் |
| ர் | ன் | ச | தா | ணி | வா | ன் |

**விடை :**

1. பாரதிதாசன்
2. கம்பர்
3. ஔவையார்
4. வாணிதாசன்
5. திருவள்ளுவர்
6. பாரதியார்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



## XI. கலைச் சொல் அறிவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வலஞ்சுழி | - | Clock wise | முகநூல் | - | Facebook |
| இணையம் | - | Internet | புலனம் | - | Whatsapp |
| தேடுபொறி | - | Search Engine | செயலி | - | App |
| இடஞ்சுழி | - | Anti clock wise | மின்னஞ்சல் | - | E-mail |
| குரல்தேடல் | - | Voice search | | | |
| தொடுதிரை | - | Touch screen | | | |

# இயல் 2

## இயற்கை இன்பம் – கவிதைப்பேழை

## சிலப்பதிகாரம்

www.Padasalai.Net

### தொகுதி – I

**ஒரு மதிப்பெண் வினா – பாட வினாக்கள்**

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. கழுத்தில் சூடுவது __________.
   அ) தார் ஆ) கணையாழி இ) தண்டை ஈ) மேகலை
   **விடை அ) தார்**

2. கதிரவனின் மற்றொரு பெயர் __________.
   அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) செவ்வாய்
   **விடை ஆ) ஞாயிறு**

3. 'வெண்குடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.
   அ) வெண் + குடை ஆ) வெண்மை + குடை
   இ) வெம் + குடை ஈ) வெம்மை + குடை
   **விடை ஆ) வெண்மை + குடை**

4. 'பொற்கோட்டு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.
   அ) பொன் + கோட்டு ஆ) பொற் + கோட்டு
   இ) பொண் + கோட்டு ஈ) பொற்கோ + இட்டு
   **விடை அ) பொன் + கோட்டு**

5. கொங்கு + அலர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் __________.
   அ) கொங்குஅலர் ஆ) கொங்அலர் இ) கொங்கலர் ஈ) கொங்குலர்
   **விடை இ) கொங்கலர்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**6.** அவன் + அளிபோல் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) அவன்அளிபோல் ஆ) அவனளிபோல்

இ) அவன்வளிபோல் ஈ) அவனாளிபோல்

**விடை ஆ)அவனளிபோல்**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சிலப்பதிகாரம் ________ களுள் ஒன்று. **விடை: ஐம்பெருங்காப்பியங்**
2. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் ________. **விடை: இளங்கோவடிகள்**
3. தமிழில் தோன்றிய முதல் காப்பியம் ________. **விடை: சிலப்பதிகாரம்**
4. சிலப்பதிகார உரையாசிரியர் ________. **விடை: அடியார்க்கு நல்லார்**
5. திங்கள் என்பதன் பொருள் ________ . **விடை: நிலவு**
6. ஞாயிறு என்பதன் பொருள் ________. **விடை: கதிரவன்**
7. சிலப்பதிகாரமும் ________ இரட்டைக் காப்பியங்கள் ஆகும். **விடை: மணிமேகலையும்**
8. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று பாராட்டியவர் ________. **விடை: பாரதியார்**
9. இளங்கோவடிகளின் காலம் கி.பி ________ நூற்றாண்டு. **விடை: இரண்டாம்**
10. இளங்கோவடிகள் ________ மன்னர் மரபைச் சேர்ந்தவர். **விடை: சேர**

## III. சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| திங்கள் | - | நிலவு |
| அலர் | - | மலர்தல் |
| திகிரி | - | ஆணைச்சக்கரம் |
| பொற்கோட்டு | - | பொன்மயமான சிகரத்தில் |
| அளி | - | கருணை |
| மேரு | - | இமய மலை |
| கொங்கு | - | மகரந்தம் |
| நாமநீர் | - | அச்சம் தரும் கடல் |

## IV. நயம் அறிக

**1. பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக**

செய்யுளின் அடிகளிலோ, சீர்களிலோ முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை ஆகும்.

**தி**ங்களைப் போற்றுதும் **தி**ங்களைப்

**ஞா**யிறு போற்றுதும் **ஞா**யிறு

**மா**மழை போற்றுதும் **மா**மழைப்

**2. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக**

செய்யுளின் அடிகளிலோ, சீர்களிலோ இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை ஆகும்.

| | |
|---|---|
| தி**ங்**களைப் | ஞா**யி**று போற்றுதும் ஞா**யி**று |
| கொ**ங்**கு | மா**ம**ழை |
| அ**ங்**கண் | நா**ம** நீர் |
| தி**ங்**களைப் போற்றுதும் தி**ங்**களைப் | மா**ம**ழை போற்றுதும் மா**ம**ழைப் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## V. பிரித்து எழுதுக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெண்குடை | - | வெண்மை + குடை | பொற்கோட்டு | - | பொன் + கோட்டு |
| அங்கண் | - | அம் + கண் | | | |

## VI. விடுபட்ட எழுத்தை நிரப்புக.

1. கொங்கு அ_______ (ல,ள) ர்தார்ச் சென்னி கு _______ ர் (ளி,லி) வெ _______ குடை (ண்,ன்)
   **விடை:** அ**லர்**, கு**ளி**ர் வெ**ண்**
2. காவி _________ (ரி,றி) நாட _________ (ன்,ண்) திகிரிபோ _________ (ல்,ள்).
   **விடை:** காவி**ரி**, நாட**ன்**, போ**ல்**
3. மாம _________ (ழை,ளை) போற் _________ (று,ரு) தும். **விடை:** மாம**ழை**, போற்**று**
4. நாம நீர் வே _________ (லி,ளி) உ _________ (ல,ள) கிற்கு. **விடை:** வே**லி**, உ**ல**கிற்கு

## தொகுதி – II

## VII. குறு வினாக்கள் (பாட வினாக்கள்)

1. **சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?**
   சிலப்பதிகாரம் வெண்ணிலவு, கதிரவன், மழை ஆகியவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது.

2. **இயற்கை போற்றத்தக்கது ஏன்?**
   ➢ நம்மைச் சுற்றிலும் எங்குப் பார்த்தாலும் இயற்கையின் அழகு கொட்டிக் கிடக்கிறது.
   ➢ கடல், மலை, கதிரவன், நிலவு, மழை, பனி, அருவி, சோலை போன்றவற்றைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.
   ➢ அதனால் இயற்கையின் கொடைகளான இயற்கைப் போற்றத்தக்கது ஆகும்.

## கூடுதல் வினாக்கள்

1. **காவிரி ஆறு எந்த நாட்டில் பாய்கிறது? அந்நாட்டை ஆட்சி செய்பவன் யார்?**
   ➢ காவிரி ஆறு சோழ நாட்டில் பாய்ந்து வளம் தருகிறது.
   ➢ இத்தகைய வளம் பொருந்திய சோழநாட்டை சோழ மன்னன் ஆட்சி செய்கிறான்.

2. **மழையை ஏன் புலவர் போற்றுகிறார்?**
   ➢ அச்சம் தரும் கடலை எல்லையாகக் கொண்டு உலகிற்கு மன்னன் அருள் செய்கிறான்.
   ➢ அது போல, மழை வானிலிருந்து பொழிந்து மக்களைக் காப்பதால் மழையைப் புலவர் போற்றுகிறார்.

3. **இப்பாடல்களின் சோழ மன்னனின் சிறப்பு எவ்வாறு எடுத்துரைக்ககப்படுகிறது?**
   ➢ தேன் நிறைந்த அத்திமலர் மாலையை அணிந்தவன் சோழ மன்னன்.
   ➢ காவிரி ஆறு பாய்ந்து வளம் செய்யும் நாட்டை ஆட்சி செய்பவன் சோழ மன்னன்.
   ➢ அச்சம் தரும் கடலை எல்லையாகக் கொண்டு உலகிற்கு அருள் செய்பவன் சோழ மன்னன்.

## VIII. சிறு வினா – கூடுதல் வினா

1. **சிலப்பதிகாரம் – குறிப்பு வரைக**
   ➢ சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம். கண்ணகியின் சிலம்பால் விளைந்த கதையை முதன்மையாகக் கொண்டது ஆதலில் சிலப்பதிகாரமாயிற்று.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- சிலப்பதிகாரம் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என மூன்று காண்டங்களை உடையது.
- முப்பது காதைகளைக் கொண்டது புகார்க் காண்டம், (பத்துக் காதைகள்), மதுரைக் காண்டம் (பதின் மூன்று காதைகள்), வஞ்சிக் காண்டம் (ஏழு காதைகளை) உள்ளடக்கியது.
- முதல் காப்பியம், இரட்டைக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம் எனச் சிலப்பதிகாரம் பல்வேறு பெயர்களைக் கொண்டுள்ளது.
- 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' எனப் பாரதியாரால் போற்றப்பட்ட நூல்.
- இசை நாடகமே சிலப்பதிகாரக் கதையின் உருவம்.

**2. இளங்கோவடிகள் – குறிப்பு தருக.**

- இளங்கோவடிகள் சேர மரபினர்.
- இளங்கோவடிகளின் பெற்றோர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், நற்சோணை.
- இளங்கோவடிகள் இளமையிலேயே துறவு பூண்டு குணவாயிற் கோட்டத்தில் தங்கினார்.
- அரசியல் வேறுபாடு கருதாதவர், சமய வேறுபாடற்ற துறவி.
- "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவனைப்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" எனப் பாரதியாரால் போற்றப்பட்டவர்.

## IX. சிந்தனை வினா – பாட வினா

**1. இயற்கையைப் போற்றும் வழக்கம் ஏற்படக் காரணமாக எவற்றைக் கருதுகிறீர்கள்?**

- இயற்கை உலகிற்கு அழகு தருகிறது.
- இயற்கை நமக்குத் தேவையானவற்றைத் தருகிறது.
- இயற்கை எல்லா உயிரினங்களும் வாழ இடமளிக்கிறது.
- இயற்கையில் இறைவன் மறைந்திருக்கிறான் என்ற கருத்து மனிதரிடையே உள்ளது.
- இயற்கைத் தரும் இன்பத்தில் நாம் மனமகிழ்ச்சி கொள்கிறோம்.

## X. கற்பவை கற்றபின்

**1. நீங்கள் விரும்பும் இயற்கைப் பொருள்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

மஞ்சள், சந்தனம், தேன், மிளகு, அத்தி மலர், மீன்

| மூலிகை தாவரங்கள் | தானியங்கள் | பழங்கள் | மரங்கள் |
|---|---|---|---|
| துளசி, கற்றாழை, தூதுவளை, வேப்பிலை, ஆடாதோடா | நெல், கம்பு, வரகு, சாமை, தினை | மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், அத்திப்பழம், கொய்யாப்பழம் | சந்தனம், தேக்கு, பூவரசு, ஆலமரம், அரசமரம் |

**2. நிலா என்னும் தலைப்பில் நான்கு அடிகளில் கவிதை படைத்திடுக.**

நீ பகலெல்லாம்
எங்கு செல்கிறாயோ?
இருளில் மட்டும் ஒளி வீசுகிறாய்!
உன் பெயரை உச்சரித்தாலே
மனதில் இன்பம் தவழ்கிறது
உன்னைப் பார்த்து வளர்ந்தவன் – நான்
உன்னைப் பார்க்கவே வளர்ந்தவன்
வா நிலவே வா! கொஞ்சி விளையாட.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 2

## கவிதைப்பேழை

## காணி நிலம்

### தொகுதி – I

**ஒரு மதிப்பெண் வினா – பாட வினாக்கள்**

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. 'கிணறு' என்பதைக் குறிக்கும் சொல் _________.
அ) ஏரி ஆ) கேணி இ) குளம் ஈ) ஆறு **விடை: ஆ) கேணி**

2. 'சித்தம்' என்பதன் பொருள் _________.
அ) உள்ளம் ஆ) மணம் இ) குணம் ஈ) வனம் **விடை:அ) உள்ளம்**

3. மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் _________.
அ) அடுக்குகள் ஆ) கூரை இ) சாளரம் ஈ) வாயில் **விடை: அ) அடுக்குகள்**

4. நன்மாடங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.
அ) நன் + மாடங்கள் ஆ) நற் + மாடங்கள்
இ) நன்மை + மாடங்கள் ஈ) நல் + மாடங்கள் **விடை: இ) நன்மைமாடங்கள்**

5. நிலத்தினிடையே என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.
அ) நிலம் + இடையே ஆ) நிலத்தின் + இடையே
இ) நிலத்து + இடையே ஈ) நிலத் + திடையே **விடை: ஆ) நிலத்தின் + இடையே**

6. முத்து + சுடர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _________.
அ) முத்துசுடர் ஆ) முச்சுடர் இ) முத்துடர் ஈ) முத்துச்சுடர்
**விடை: ஈ) முத்துச்சுடர்**

7. நிலா + ஒளி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _________.
அ) நிலாஒளி ஆ) நிலஒளி இ) நிலாவொளி ஈ) நிலவுஒளி
**விடை: இ) நிலாவொளி**

### II. பொருத்துக

| | | | விடைகள் |
|---|---|---|---|
| முத்துச்சுடர் போல | - | மாடங்கள் | நிலாஒளி |
| தூய நிறத்தில் | - | தென்றல் | மாடங்கள் |
| சித்தம் மகிழ்ந்திட | - | நிலாஒளி | தென்றல் |

### III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கா _________ (ணி,னி) நி _________ (ல,ள) ம் வேண்டும். **விடை:** கா<u>ணி</u> நி<u>ல</u>ம் வேண்டும்
2. தூணி _________ (ல்,ள்) அ _________ (ழ,ள) கியதாய். **விடை:** தூணி<u>ல்</u> அ<u>ழ</u>கியதாய்



www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. கே ________ (ணி,னி) அ ________ (ரு,று) கினிலே **விடை: கேணி அருகினிலே**

4. ந ______ (ன்,ண்) றாய் இ ______ (ல,ள) ந் தெ______ றல் (ற,ர). **விடை: நன்றாய் இளந்தென்றல்**

## IV. பிரித்து எழுதுக.

நன்மாடங்கள் - நன்மை + மாடங்கள்
நிலத்திடையே - நிலத்து + இடையே
நிலாவொளி - நிலா + ஒளி
குயிலோசை - குயில் + ஓசை

## V. பொருள் தருக.

காணி - நில அளவைக் குறிக்கும் சொல்
மாடங்கள் - மாளிகையின் அடுக்குகள்
சித்தம் - உள்ளம்

## VI. இ) நயம் அறிக

1. காணி நிலம் பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
செய்யுளின் அடிகளிலோ சீர்களிலோ முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனையாகும்.

| | | | |
|---|---|---|---|
| **கா**ணி | **தூ**ணில் | **கா**ணி | **கே**ணி |
| **கா**ணி | **து**ய்ய | **க**ட்டி | **கீ**ற்றும் |
| **ப**த்தும் | **மு**த்துச் | **க**த்துங் | |
| **ப**க்கத்திலே | **மு**ன்பு | **கா**தில் | |

2. காணி நிலம் பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
செய்யுளின் அடிகளிலோ சீர்களிலோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகையாகும்.

| | |
|---|---|
| கா**ணி** | க**த்**துங் |
| கா**ணி** | கா**தி**ல் |

## VII. கோடிட்ட இடத்தை நிரப்புக.

### ஒரு மதிப்பெண் வினா (கூடுதல் வினா)

1. தேசியக் கவிஞர், விடுதலைக்கவிஞர் எனப் பாராட்டப்பட்டவர் ________. **விடை: பாரதியார்**
2. ______ மன்னரால் பாரதி என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர் பாரதியார். **விடை: எட்டயபுர**
3. பாரதியாரின் இயற்பெயர் ________. **விடை: சுப்பிரமணியன்**
4. கேணி என்பதன் பொருள் ________. **விடை: கிணறு**
5. சித்தம் என்பதன் பொருள் ________. **விடை: உள்ளம்**

## தொகுதி – II

### VIII. குறு வினாக்கள் (பாட வினாக்கள்)

1. **காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?**

➢ காணி நிலம் வேண்டும்.
➢ மாளிகை ஒன்று கட்டித்தர வேண்டும்.
➢ மாளிகையில் தூண்களும், மாடங்களும் அமைந்திருக்க வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- நல்ல நீரையுடைய கிணறு இருக்க வேண்டும்.
- இளநீரும் கீற்றும் தரும் தென்னை மரங்கள் அங்கு வேண்டும் என பாரதியார் வேண்டுகிறார்.

**2. பாரதியார் இயற்கையின் மீது கொண்டுள்ள விருப்பம் குறித்து எழுதுக.**

- இயற்கையோடு வாழ்வதே இன்பமான வாழ்வு.
- அடுக்ககங்களில் வாழ்பவர்படும் அல்லல் ஏராளம்.
- இயற்கைச் சூழலோடு அமைந்த வீட்டில் வாழ்பவன் இன்பமாக, மகிழ்வாக வாழ்கிறான்.
- நிலம், மாளிகை, கிணறு, தென்னை மரங்கள் போன்ற இயற்கையோடு பாரதியின் கனவு இல்லம் அமைந்துள்ளது.

## IX. சிந்தனை வினா

**1. பாரதியார் வீட்டின் அருகில் தென்னை மரங்கள் வேண்டும் என்கிறார். நீங்கள் எந்தெந்த மரங்களை வளர்ப்பீர்கள் என எழுதுக.**

வாழை மரம், மாமரம், பனை மரம், வேப்பம் மரம், கொய்யா மரம், ஆரஞ்சு மரம் போன்ற மரங்களை வளர்ப்பேன். கனி தரும் மரங்களையும், நிழல் தரும் மரங்களையும் வளர்ப்பேன்.

## கூடுதல் வினா

**1. பாரதியார் – குறிப்பு வரைக**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | சுப்பிரமணியன் |
| பிறப்பு | - | 11.12.1882 |
| பிறந்த ஊர் | - | தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் |
| பெற்றோர் | - | சின்னச்சாமி, இலக்குமி அம்மாள் |
| இயற்றிய நூல்கள் | - | கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் |
| சிறப்பு | - | தேசியக் கவிஞர், விடுதலைக் கவிஞர் எனப் போற்றப்படுகிறார் |
| இறப்பு | - | 1921 செப்டம்பர் 12 |

# இயல் 2

## உரைநடை உலகம்

## சிறகின் ஓசை

## தொகுதி – I

### ஒரு மதிப்பெண் வினா – பாட வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. 'தட்பவெப்பம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.

அ) தட்பம் + வெப்பம் ஆ) தட்ப + வெப்பம்

இ) தட் + வெப்பம் ஈ) தட்பு + வெப்பம்

**விடை: அ) தட்பம் + வெப்பம்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. ‘வேதியுரங்கள்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) வேதி + யுரங்கள் ஆ) வேதி + உரங்கள்
இ) வேத் + உரங்கள் ஈ) வேதியு + ரங்கள்

**விடை: ஆ) வேதி + உரங்கள்**

3. தரை + இறங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.
அ) தரையிறங்கும் ஆ) தரைஇறங்கும்
இ) தரையுறங்கும் ஈ) தரைய்றங்கும்

**விடை: அ)தரையிறங்கும்**

4. வழி + தடம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.
அ) வழிதடம் ஆ) வழித்தடம் இ) வழிதிடம் ஈ) வழித்திடம்

**விடை: ஆ) வழித்தடம்**

5. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி ________.
அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

**விடை: அ) துருவப்பகுதி**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மிக நீண்ட தொலைவு பறக்கும் பறவை ________. **விடை: ஆர்டிக் ஆலா**
2. பறவைகள் வலசை போவதைப் பற்றிப் பாடிய தமிழ்ப்புலவர் ________.
**விடை: சத்திமுத்தப்புலவர்**
3. பறவைகள் இடம்பெயர்வதற்கு ________ என்று பெயர். **விடை: வலசை போதல்**
4. இந்தியாவின் பறவை மனிதர் ________. **விடை: டாக்டர் சலீம் அலி**
5. பறவைகள் வலசை போகக் காரணங்களுள் ஒன்று ________. **விடை: உணவு**

## கூடுதல் வினாக்கள்

1. பறவைகள் தங்களுக்கென ஒரு ______ தேர்ந்தெடுத்து பறக்கின்றன. **விடை: வழித்தடத்தைத்**
2. இடையில் எங்கும் நிற்காமல் பறந்து _______ சேரும் பறவைகளும் உண்டு. **விடை: வாழிடம்**
3. நாராய், நாராய் செங்கால் நாராய் என்னும் பாடலைப் பாடியவர் ________.
**விடை: சத்திமுத்தப் புலவர்**
4. தென்திசைக் குமரி ஆடி வட திசைக்கு ஏகுவீர் ஆயின் என்னும் அடிகள் பறவைகள் ________ வந்த செய்தியைக் குறிப்பிடுகின்றன. **விடை: வலசை**
5. வெளிநாட்டுப் பறவைகளுக்குப் புகலிடமாகத் திகழ்கிறது ________. **விடை: தமிழ்நாடு**
6. தற்போது வெகுவாக அழிந்து வரும் பறவையினம் ________ ஆகும். **விடை: சிட்டுக்குருவி**
7. சிட்டுக்குருவி ________ வாழும் பறவையினத்தைச் சார்ந்தது. **விடை: கூடுகட்டி**
8. சிட்டுக்குருவி ________ நாள்கள் அடைகாக்கும். **விடை: பதினான்கு**
9. சிட்டுக்குருவியின் வாழ்நாள் ________ முதல் பதினைந்து ஆண்டுகள் ஆகும். **விடை: பத்து**
10. இன்றைய பறவையியல் ஆய்வாளர்களுக்கு முன்னோடி ______. **விடை: டாக்டர் சலீம் அலி**
11. டாக்டர் சலீம் அலி எழுதிய நூல் ________. **விடை: சிட்டுக்குருவியின் வீழ்ச்சி**
12. ‘காக்கைக் குருவி எங்கள் சாதி’ என்று பாடியவர் ________. **விடை : பாரதியார்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. சொற்றொடர் அமைத்து எழுதுக.

1. வெளிநாடு - வெளிநாடு சென்று பல இடங்களைக் கண்டு இன்புற வேண்டும்
2. வாழ்நாள் - ஒவ்வொருவரும் வாழ்நாள் முழுதும் உடல்நலத்தோடு வாழவே விரும்புகின்றனர்
3. செயற்கை - செயற்கை உரங்களை பயன்படுத்தக்கூடாது

## IV. பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்புக.

1. மரங்களை வளர்த்து **இயற்கை**யைக் காப்போம் **செயற்கை** உரங்களைத் தவிர்த்து நிலவளம் காப்போம் **(செயற்கை, இயற்கை)**
2. தமிழகத்தில் வலசைப் பறவைகளின் வருகை **மிகுந்துள்ளது**. தற்போது சிட்டுக் குருவிகளின் எண்ணிக்கை **குறைந்துள்ளது**. **(குறைந்துள்ளது, மிகுந்துள்ளது)**

## V. ஒருமை பன்மைப் பிழைகளைத் திருத்தி எழுதுக

1. நீர் வாழ் பறவைகளே பெரும்பாலும் வலசை போகின்றது.
   **விடை :** நீர்வாழ் பறவைகளே பெரும்பாலும் வலசை போகின்**றன**.
2. சிட்டுக்குருவி கூடுகட்டி வாழும் பறவையினத்தைச் சார்ந்தன
   **விடை :** சிட்டுக்குருவி கூடுகட்டி வாழும் பறவையினத்தைச் சார்ந்த**து**.
3. இமயமலைத் தொடரில் 4000 மீட்டர் உயரத்தில் கூட சிட்டுக்குருவிகள் வாழ்கின்றது.
   **விடை :** இமயமலைத் தொடரில் 4000 மீட்டர் உயரத்தில் சிட்டுக்குருவிகள் வாழ்கின்**றன**.

## தொகுதி – II

### VI. குறு வினாக்கள் (பாட வினாக்கள்)

**1. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?**

பறவைகள் உணவு, இருப்பிடம், தட்ப வெப்பநிலை, மாற்றம், இனப்பெருக்கம் போன்ற காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன.

**2. வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?**

- தலையில் சிறகு வளர்தல்
- இறகுகளின் நிறம் மாறுதல்
- உடலில் கற்றையாக முடி வளர்தல்
- வேறுவகைப் பறவை என்று கருதும் அளவிற்கு மாற்றமடைதல்

## கூடுதல் வினாக்கள்

**1. வலசைப் போதல் என்றால் என்ன?**

- பறவைகள் கண்டம் விட்டுக் கண்டம் பறக்கின்றன. கடல், மலை கடந்து போகின்றன.
- இவ்வாறு பறவைகள் இடம் பெயர்வதை வலசை போதல் என்பர்.

**2. பறவைகள் வலசை வருவது பற்றிய இலக்கியச் செய்திகள் தருக**

- 1500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சத்திமுத்தப் புலவர் "நாராய் நாராய் செங்கால் நாராய்" என்னும் பாடலைப் பாடியுள்ளார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- "தென்திசைக் குமரி ஆடி வட திசைக்கு ஏகுவீர் ஆயின்" என்னும் அடிகள் பறவைகள் வலசை வந்த செய்தியைக் குறிப்பிடுகின்றன.

**3. கப்பல் பறவை பற்றி குறிப்பு வரைக?**

- சிறகடிக்காமல் கடலையும் தாண்டிப் பறக்கும் பறவை கப்பல் பறவை.
- இது தரையிறங்காமல் 400 கிலோ மீட்டர் வரை பறக்கும்.
- இது கப்பல் கூழைக்கடா, கடற்கொள்ளைப் பறவை என்றும் அழைக்கப்படுகிறது.

**4. இந்தியாவின் பறவை மனிதர் பற்றி குறிப்பு தருக**

- இன்றைய பறவையியல் ஆய்வாளர்களுக்கு முன்னோடி டாக்டர் சலீம் அலி.
- தம் வாழ்நாள் முழுவதும் பறவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலும் அவற்றைப்படம் பிடிப்பதிலும் ஈடுபட்டார்.
- அதனால் அவர் இந்தியாவின் பறவை மனிதர் என்று அழைக்கப்படுகிறார்.
- தன் வாழ்க்கை வரலாற்று நூலுக்குச் சிட்டுக் குருவியின் வீழ்ச்சி என்று பெயரிட்டுள்ளார்.

## VII. சிறுவினா

**1. சிட்டுக் குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.**

- தற்போது வெகுவாக அழிந்து வரும் பறவையினம் சிட்டுக்குருவி ஆகும்.
- ஆண்குருவியின் தொண்டைப் பகுதி கறுப்பு நிறத்தில் இருக்கும். உடல் பகுதி அடர் பழுப்பாக இருக்கும்.
- பெண் குருவியின் உடல் முழுவதும் மங்கிய பழுப்பு நிறத்தில் இருக்கும்.
- சிட்டுக்குருவி கூடுகட்டும் காலங்களில் சத்தமிட்டுக் கொண்டே இருக்கும்.
- கூடுகட்டியபின் மூன்று முதல் ஆறு முட்டைகள் வரை இடும். பதினான்கு நாள்கள் அடைகாத்தபின் குஞ்சுகள் பொறிக்கும்.
- துருவப்பகுதிகள் தவிர இந்தியா முழுவதும் சிட்டுக்குருவிகள் வாழ்கின்றன.
- தானியங்கள், புழு பூச்சிகள், மலர் அரும்புகள், இளந்தளிர்கள், தேன் போன்றவை சிட்டுக்குருவிகளின் உணவாகும்.
- சிட்டுக்குருவிகளின் வாழ்நாள் பத்து முதல் பதின்மூன்று ஆண்டுகள் ஆகும்.

**2. வலசைப் பறவைகளின் பயணம் பற்றி நீங்கள் அறிந்தவை யாவை?**

- பறவைகள் கண்டம் விட்டு பெருங் கடல்களையும் மலைகளையும் கடந்து போகின்றன. குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்கின்றன. இவ்வாறு பறவைகள் இடம் பெயர்தலை, வலசைப் போதல் என்பர்.
- உணவு இருப்பிடம், தட்பவெப்ப நிலை மாற்றம், இனப்பெருக்கம், இவற்றிற்காகவே பறவைகள் இடம் பெயர்கின்றன.
- நிலவு, விண்மீன், புவி ஈர்ப்புப் புலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பறவைகள் இடம் பெயர்கின்றன.
- பறவைகள் தங்களுக்கென ஒரு வழித்தடத்தைத் தேர்ந்தெடுத்து அந்தப் பாதையிலேயே பறக்கின்றன. சில பறவை இனங்கள் போவதற்கும் வருவதற்கும் இருவேறு பாதைகளைப் பயன்படுத்துகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- பயணம் செய்யும் போது சில வகைப் பறவைகள் இரை, ஓய்வு போன்ற தேவைகளுக்காகத் தரை இறங்கும். இடையில் எங்கும் நிற்காமல் பறந்து வாழிடம் சேரும் பறவைகளும் உண்டு.

## VIII. சிந்தனை வினா

**1. பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்றப்பட நாம் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக**

**மரம் நடுதல்**

ஆல், அரசு போன்ற மரங்களையும் அவரை, புடலை போன்ற கொடிகளையும் வளர்க்க வேண்டும். ஏராளமான மரங்களை வளர்த்தால் தான் பறவைகள் மகிழ்வாக வாழும். தங்கி கூடிகட்டி குஞ்சுகளைப் பொரிக்கும்.

**தாவரம் வளர்த்தல்**

நமது மண்ணுக்கேற்ற பிறவகை உள்ளூர்த் தாவரங்களையும் வளர்க்க வேண்டும்.

**தவிர்த்தல்**

தோட்டங்களிலும் வயல்வெளிகளிலும் செயற்கை உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவற்றைத் தெளிப்பதைத் தவிர்க்கலாம்.

பறவைகளைத் தொந்தரவு செய்யக்கூடாது. வெடி வெடிக்கக் கூடாது. பறவைகளுக்கு உணவு, நீர் தந்து பராமரிக்க வேண்டும்.

## IX. கற்பவை கற்ற பின்

**1. உங்கள் பகுதியில் காணப்படும் பறவைகளின் பெயர்களைப் பட்டியலிடுக**

கிளி, மயில், குயில், ஆந்தை, காகம், நாரை, புறா, பருந்து

**2. பறவைகள் தொடர்பான பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.**

- கிளிக்கு இறக்கை முளைத்தால் கூண்டில் தங்காது.
- காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
- உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

**3. இயற்கையைப் பாதுகாக்கும் வகையில் முழக்கத் தொடர்களை எழுதுக.**

(எ.கா) காப்போம் காப்போம்! பறவைகளைக் காப்போம்!
வளர்ப்போம் வளர்ப்போம்! மரங்களை வளர்ப்போம்!
காப்போம் காப்போம் ஆற்றினைக் காப்போம்!
இயற்கையைக் காப்போம்! செயற்கையை அழிப்போம்!
அழகு! அழகு இயற்கையே அழகு
இன்பம் இன்பம்! இயற்கையே இன்பம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 2

## விரிவானம்

## கிழவனும் கடலும்

### தொகுதி – I

#### I. நெடு வினா – பாட வினா

1. **‘கிழவனும் கடலும் ’ என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக.**

- வயது முதிர்ந்த மீனவர் சாண்டியாகோ முன்பெல்லாம் கடலுக்குச் சென்றால் மீன் இல்லாமல் திரும்பமாட்டார். ஆனால் கடந்த எண்பத்து நான்கு நாள்களாக ஏனோ அவருக்கு ஒரு மீனும் கிடைக்கவில்லை.
- மனோலின் என்னும் சிறுவன் மீன் பிடிக்கக் கற்றுக்கொள்வதற்காக முதல் நாற்பது நாள்களும் அவருடன் கடலுக்கு வந்தான்.
- அவரோடு கடலுக்குப் போனால் ஒரு மீனும் கிடைப்பதில்லை என்று அவனை வேறு படகிற்கு அனுப்பிவிட்டனர் அவனது பெற்றோர்.
- இதனால் தனியாகவே மீன்பிடிக்கச் சென்றார் சாண்டியாகோ.
- எண்பத்து ஐந்தாவது நாள், மீன் பிடிக்கச் செல்கிறார் சாண்டியாகோ.
- இரவு முழுவதும் மீன் சிக்கவில்லை. தூண்டில் கயிற்றை ஏதோ இழுப்பது போல் இருக்கிறது.
- தூண்டில் முள்ளில் உனக்காகச் சூரை மீனை மாட்டி வைத்திருக்கிறேன். சாப்பிடு சாப்பிடு நீ என்னிடம் மாட்டுவாய் வா என்று மீனுக்காகக் காத்திருந்தார் சாண்டியாகோ.
- மீனே ஏன் இப்படி தூண்டிலை இழுக்கிறாய். என்னையும் கடலுக்குள் இழுத்து விடப்பார்க்கிறாயா?
- நாலுமணி நேரமாக என்னிடம் இம்மீன் ஆட்டம் காட்டுகிறதே!
- விடமாட்டேன் இன்று என்னிடம் இருந்து உன்னால் தப்பிக்கவே முடியாது.
- ஆகா தூண்டிலில் மாட்டியது நீ தானா! அடேயப்பா எவ்வளவு பெரியமீன்!
- ஏன் படகைச் சுற்றி வட்ட மிடுகிறாய் நில், நில் என் வலிமையை எல்லாம் திரட்டி உன்னை எதிர்க்கப் போகிறேன்.
- நீ எவ்வளவு பெரிய மீனாக இருந்தாலும் என் உயிர் உள்ளவரை உன்னுடன் போராடி வெற்றி பெறுவேன்.
- உனக்கும் போராட்டம் எனக்கும் போராட்டம். இறுதியாக உன்னைக் கொன்றுவிட்டேன். எனக்கு மீன் கிடைக்காது என்று எல்லோரும் சொன்னார்கள், வலை இல்லாமல் பெரிய மீனை நான் பிடித்து விட்டேன். விடாமுயற்சியின் பயனை இன்று நான் உணர்ந்தேன்.
- இந்த மீன் செய்த அட்டகாசங்களை மனோலின் பார்த்திருக்க வேண்டும்.
- ஆ என்ன இது சுறாக்கள் தின்றது போக கடைசியில் மீனின் தலையும் அதன் எலும்பும் தாம் மிஞ்சியுள்ளனவா!



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



➢ தாத்தாவைப் பார்க்க வருகிறான் மனோலின். மீன்பிடிப்பதில் பெரிய வீரன் எனப் பாராட்டுகிறான். மனோலின் தாத்தாவோ நான் பிடித்த மீனில் எலும்பும் தசையும் தான் மிச்சம் என்கிறார். மனோலின் உங்கள் திறமையும் விடா முயற்சியும் வென்றுவிட்டது என்று தாத்தாவைப் பாராட்டுகிறான்.

**கற்பவை கற்ற பின்**

**2. இக்கதையின் வழியாக நீங்கள் உணர்ந்தவற்றை வகுப்பில் பகிர்க.**

**முன்னுரை**

இக்கதையின் நாயகன் சாண்டியாகோ வயது முதிர்ந்த மீனவர். கடலுக்குச் சென்றால் மீன் இல்லாமல் திரும்பமாட்டார், ஆனால் கடந்த எண்பத்து நான்கு நாள்களாக ஏனோ அவருக்கு ஒரு மீனும் கிடைக்கவில்லை.

**மனோலின்**

மனோலின் என்ற சிறுவன் மீன்பிடிக்கக் கற்றுக் கொள்வதற்காக முதல் நாற்பது நாள்களும் அவருடன் கடலுக்கு வந்தான். அவருக்குப் பேச்சுத் துணையாகவும் உதவியாகவும் இருந்தான். அவரோடு கடலுக்குப் போனால் ஒரு மீனும் கிடைப்பதில்லை என்று அவனை வேறு படகிற்கு அனுப்பி விட்டனர் பெற்றோர்.

**தன்னந்தனியாக முயற்சி**

சாண்டியாகோ தன்னந்தனியாகவே மீன் பிடிக்கச் சென்றார். 84 நாள்களும் மீன் கிடைக்கவில்லையென்றாலும் மனந் தளராமல் தொடர்ந்து சென்றார்.

**முயற்சியின் பரிசு**

எண்பத்தைந்தாவது நாள் தூண்டிலில் ஒரு பெரிய மீன் சிக்குகிறது. பெரிய போராட்டம்; நாலுமணி நேரமாக மீனுக்கும் இவருக்கும் கடும் போராட்டம், இறுதியில் மீனைப் பிடிக்கிறார்.

**உயிர் உள்ள வரை**

சாண்டியாகோ அவர்களின் முயற்சி, அதுவும் விடாமுயற்சியைப் பாராட்டத்தான் வேண்டும். போராட்டத்தின் முடிவில் ஒன்று நான் உயிரோடு இருப்பேன் அல்லது நீ இருப்பாய் என்று துணிந்து நிற்கிறார்.

**முடிவுரை**

சுறா, தூண்டில் மீனின் தலையை மட்டும் வைத்துவிட்டு மீதியைச் சாப்பிட்டுவிட்டாலும் அவரின் விடாமுயற்சியும் திறமையும் வெற்றி பெற்றதை இக்கதையின் மூலம் நாம் அறிகிறோம்.

**3. சாண்டியாகோ குறித்து உங்கள் கருத்து யாது?**

**போராட்ட நாயகன்**

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே நடக்கும் இனிய போராட்டத்தை இக்கதையில் நாம் காண்கிறோம். வயது முதிர்ந்தாலும் அவருடைய முயற்சியும் உழைப்பும் குறையவே இல்லை.

**சோர்விலும் முயற்சி**

எண்பத்து நான்கு நாள்களாக மீன் கிடைக்கவில்லையானாலும் மனம் சோர்ந்துவிடாமல் தொடர்ந்து முயற்சி செய்கிறார் சாண்டியாகோ.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**தன்னந்தனியாக துணிவு**

தன்னுடன் வந்திருந்த மனோலின் இடையில் வரவில்லை என்றாலும் மனந் தளராமல் தொடர்ந்து மீன் பிடித்துக்கொண்டிருக்கிறார். தன்னால் முடியும் என்ற நம்பிக்கையில் அவர் சற்றும் மனந்தளராமல் உழைத்தார்.

**இறுதியில் வெற்றி**

எண்பத்து ஐந்தாவது நாள் தூண்டிலில் ஒரு பெரிய மீன் சிக்குகிறது. மீனுக்கும் இவருக்கும் போராட்டம். இறுதியில் இவர் வெற்றி பெறுகிறார். கவலை, சோர்வு, விரக்தி இவற்றுக்குப் பின் தான் தொடர் உழைப்பால் சாண்டியாகோ தன் பணியில் வெற்றிபெறுகிறார். தொடர்ந்து முயன்றால் நாமும் வெற்றி பெறலாம் என்ற தன்னம்பிக்கையை அவர் நமக்குப் படிப்பினையாகத் தருகிறார்.

# இயல் 2

## கற்கண்டு

## முதலெழுத்தும் சார்பெழுத்தும்

### தொகுதி – I

**ஒரு மதிப்பெண் வினா – கூடுதல் வினாக்கள்**

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. எழுத்துக்கள் ________ வகைப்படும். **விடை : இரண்டு**
2. உயிர் எழுத்துக்கள் ________ ஆகும். **விடை : பன்னிரண்டு**
3. மெய்யெழுத்துகள் ________ ஆகும். **விடை : பதினெட்டு**
4. முதலெழுத்துகள் ________ ஆகும். **விடை : முப்பது**
5. சார்பு எழுத்துகள் ________ வகைப்படும். **விடை : பத்து**
6. மூன்று புள்ளிகளை உடைய தனித்த வடிவம் பெற்ற எழுத்து ________. **விடை : ஆய்தம்**
7. ஆய்த எழுத்தை ________ என்றும் அழைப்பர். **விடை : தனிநிலை**
8. சார்பெழுத்து ________ இயங்காது. **விடை : தனித்து**

### தொகுதி – II

### II. குறுவினா – பாட வினா

1. **முதல் எழுத்துகள் என்பவை யாவை?அவை எதனால் அவ்வாறு அழைக்கப் படுகின்றன?**

   மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் மொழி முதல் எழுத்துகள் ஆகும். உயிர் 12ம், மெய் 18ம் இணைந்து மொழி முதல் எழுத்து ‘முதலை வைத்துப் பொருளீட்டு’ என்னும் சொற்றொடரில் உள்ள முதல் போன்றது இன்னும் பிற எழுத்துகள் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் முதற்காரணமாக இவை இருக்கின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?**

சார்பெழுத்துகள் 10 வகைப்படும். அவை,

1. உயிர் மெய், 2. ஆய்தம், 3. உயிரளபெடை, 4. ஒற்றளபெடை
5. குற்றியலுகரம், 6. குற்றியலிகரம் 7. ஐகாரக்குறுக்கம், 8. ஔகாரக்குறுக்கம்
9. மகரக்குறுக்கம், 10. ஆய்தக்குறுக்கம்

**3. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம்பெறும்?**

ஆய்த எழுத்து (ஃ) தமிழ் கற்றலுக்கான முதன்மைக் குறியீடு ஆகும். இதற்கு அஃகேனம், தனிநிலை, முப்புள்ளி, முப்பாற்புள்ளி என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவ்வெழுத்தானது தனக்கு முன்னர் ஒரு குறிலையும், பின்னர் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்று வரும். உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகள் இல்லாமல் தனித்த நிலையைப் பெற்று, தனித்து நின்று தனியோடு எழுத்தாக இருப்பதால் "தனிநிலை" என்றும் அழைக்கப்படும். சார்பெழுத்துகளில் ஒன்று இயல்பாக அரை மாத்திரை அளவும், ஓசை குறைந்து வரும் போது கால் மாத்திரை அளவும் ஒலிக்கும்.

(எ.கா) அஃது = ‘அ’ குறில் ‘து’ வல்லின உயிர்மெய்

இஃது = ‘இ’ குறில் ‘து’ வல்லின உயிர்மெய்

**கூடுதல் வினா**

**1. எழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

எழுத்து இரண்டு வகைப்படும்

அவை 1. முதலெழுத்து 2. சார்பு எழுத்து

**2. முதல் எழுத்துகள் யாவை?**

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகள் ஆகும்.

**3. முதலெழுத்துகள்–பெயர்க்காரணம் தருக?**

பிற எழுத்துகள் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் முதற்காரணமாக இருப்பதனால் இவற்றை முதல் எழுத்துகள் என்பர்.

**4. உயிர்மெய் எழுத்துகள் எவ்வாறு தோன்றுகின்றன?**

- மெய் எழுத்துகளும் உயிர் எழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால் உயிர்மெய் எழுத்துகள் தோன்றுகின்றன. க் + அ - க.
- உயிர்மெய் எழுத்தின் ஒலி வடிவம் மெய்யும் உயிரும் சேர்ந்ததாக இருக்கும்.
- வரி வடிவம் மெய்யெழுத்தை ஒத்திருக்கும். ஒலிக்கும் கால அளவு உயிர் எழுத்தை ஒத்திருக்கும்.
- முதல் எழுத்துகளைச் சார்ந்து வருவதால் இவை சார்பெழுத்து வகையுள் அடங்கும்.

**5. ஆய்தம்– குறிப்பு வரைக (அல்லது) சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம்பெறும்?**

- மூன்று புள்ளிகளை உடைய தனித்த வடிவம் பெற்றது ஆய்த எழுத்து
- முப்புள்ளி முப்பாற்புள்ளி, தனிநிலை என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- நுட்பமான ஒலிப்பு முறையை உடையது
- சொல்லின் இடையில் மட்டும் வரும் - அஃது தனித்து இயங்காது.
- முதல் எழுத்துகளாகிய உயிரையும், மெய்யையும் சார்ந்து இயங்குவதால் ஆய்த எழுத்து சார்பெழுத்து ஆகும்.

## கற்பவை கற்றபின்

**1. முதல் எழுத்துகள், சார்பு எழுத்துகள் தொடர்பைப் பற்றி விவாதிக்க**

- முதல் எழுத்துகள் உயிர் 12ம், மெய் 18ம் ஆகிய முப்பது எழுத்துகள் முதல் எழுத்துகள் என அழைக்கப்படும்.
- முதல் எழுத்துக்களைச் சார்ந்து பிறக்கின்ற எழுத்துகள் சார்பெழுத்துகள் என அழைக்கப்படும்.
- பிற எழுத்துகள் தோன்றுவதற்கும், இயங்குவதற்கும் முதல் காரணமாக இருக்கும்.
- சார்பெழுத்துக்கள் 10 வகைப்படும். இவை தனித்து இயங்கும் ஆற்றல் இன்றி இருப்பதாலும் இவை சார்பெழுத்துக்கள் என்றழைக்கப்படும்.

**2. முதல் எழுத்துகள் மட்டும் இடம்பெறும் சொற்களை எழுதுக.**

**(எ.கா)** ஆம்

| | | | |
|---|---|---|---|
| அன்பு, | ஆல், | இல், | உண், |
| ஊண், | எள், | எண், | என், |
| ஏன், | ஓர் | | |

**3. முதல் எழுத்துகள் இடம்பெறாத சொற்களை எழுதுக.**

**(எ.கா)** குருவி

| | |
|---|---|
| கனிவு, | பணிவு |
| கருப்பு, | மருப்பு |
| காலை, | மாலை |

## மொழியை ஆள்வோம்!

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக**

**1. இயல்பாகவே தோன்றி மறையும் பொருள்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் அனைத்தும் ஒன்றிணைந்ததே இயற்கை என்கிறோம். பனிபடர்ந்த நீல மலைகள், பாடித்திரியும் பறவைகள், தன்னிச்சையாகச் சுற்றித்திரியும் விலங்குகள், சலசலக்கும் ஓடைகள், ஆர்ப்பரித்து வீழும் அருவிகள், நீந்தும் மீன்கள், அலைவீசும் அழகிய கடல், கண்சிமிட்டும் விண்மீன்கள், தங்க ஓடமாய்த் தவழ்ந்து வரும் வெண்ணிலா இவையெல்லாம் இயற்கை நமக்குத் தந்த கொடைகள். இயற்கையின் அழகைக் கண்டு இன்புற்றால் மட்டும் போதாது. அந்த அழகை நாம் பாதுகாக்க வேண்டும். நாம் நமது தேவைக்காக மலைகள், காடுகள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றை அழித்து வருகிறோம். மேலும் நிலம், நீர், காற்று ஆகியவற்றை மாசுபடுத்தி வருகிறோம். அதனால் இயற்கைச் சமநிலை மாறி புவி வெப்பமயமாகிறது. புவி வெப்பமடையாமல் காப்பது நமது கடமை. இயற்கையைப் பாதுகாத்தால் மட்டுமே நாம் நம்மையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.**

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**வினாக்கள்**

1. **எதனை இயற்கை என்கிறோம்?**

இயல்பாகவே தோன்றி மறையும் பொருள்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் அனைத்தும் ஒன்றிணைந்ததே இயற்கை ஆகும்.

2. **இப்பத்தியில் உள்ள இயற்கையை வருணிக்கும் சொற்கள் யாவை?**

பனிபடர்ந்த நீல மலைகள், பாடித்திரியும் பறவைகள், தன்னிச்சையாகச் சுற்றித்திரியும் விலங்குகள், சல சலக்கும் ஓடைகள், ஆர்ப்பரித்து வீழும் அருவிகள், நீந்தும் மீன்கள், அலைலவீசும் அழகிய கடல், கண்சிமிட்டும் விண்மீன்கள், தங்க ஓடமாய்த் தவழ்ந்து வரும் வெண்ணிலா போன்றவை இயற்கையை வருணிக்கும் சொற்கள் ஆகும்.

3. **இயற்கையை ஏன் பாதுகாக்க வேண்டும்?**

- நிலம், நீர், காற்று ஆகியவற்றை நாம் மாசுபடுத்தி வருகிறோம். அதனால் இயற்கைச் சமநிலை மாறி புவி வெப்பமயமாகிறது.
- புவி வெப்பமடையாமல் காப்பது நமது கடமை.
- இயற்கையைப் பாதுகாத்தால் தான் நாம் நம்மையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

4. **பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.**

இயற்கை

## கட்டுரை

1. **கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**இயற்கையைக் காப்போம்.**

**முன்னுரை, பேரழகில் இயற்கை, அலைகடலின் ஆட்சி, கதிரவனின் காட்சி, கொட்டும் அருவியின் மாட்சி, இயற்கையின் சாட்சி, முடிவுரை**

அடர்ந்த பெருங்காடு - அது
    மரங்களுக்கு வீடு
மழைக்கு தேவை அந்தக்காடு
    மழையில்லையெனில் பெரும்காடு
நாடேயாகும் சுடுகாடு
    இயற்கையைக் காப்போம்
வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்!

**முன்னுரை :**

"தங்கம் உருக்குத் தழல் குறைத்துச் சூடேற்றி எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ?" என்று பாடினார். புதுமைக் கவிஞர் பாரதிதாசனார். இயற்கையின் இறைவன் வாழ்கின்றார். அதன் ஓவியர்களுக்கு வண்ணம் தீட்டி மகிழ்கின்றார். அதனை நாம் பேணிக்காக்கும் வழிமுறைகளை இக்கட்டுரையில் காண்போம்.

**பேரழகில் இயற்கை :**

கதிரவன் வீசும் ஒளியில் கார்முகில் கூட்டங்கள் பெரிய மின் குமிழ்கள் போல் வெண்ணியற உள்ளொளி பெறுகின்றன. மேகக்கூட்டங்கள் அசைந்தாடும் காட்சி அழகு, வானத்திற்கு ஏறுவதற்கென வைத்த ஏணிகள் போல மலைகள் வரிசையாகப் பறக்கும் பறவைக்கூட்டம். தங்கச் சுரங்கமோ! அமுதம் பொங்கும் பாற்கடலோ! வைரமும் மணிகளும் குவிக்கப்பெற்ற வண்ணமயமாய் பலவித இயற்கைப் பேரழகில் இதயம் கொள்ளை போகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**அலைகடலின் ஆட்சி**

நீல நிற அலை வந்து விளையாடி, ஓவியம் வரைந்து மணல் மேல் போடும் கோலத்தில், மக்கள் மனம் போடும் தாளம் விரைவில் நீரால் அழியும் காலம் அலைகடலில் மதியுடன் அணுகினால் அழிவில்லை. விண்மீன்கள் கண்சிமிட்டும் விந்தையான அந்தி மாலையில், கடலில் வெள்ளிப்பூக்கள் பூத்தது போல அழகாய் இருக்கும்.

**கதிரவனின் காட்சி :**

காலை வானில் கதிரொலி பரப்பி எழும் இளங்கதிரவன் தங்கப்பந்தினைப் போல் தோன்றுகின்றான். கோழிகள் கூவின. பறவைகள் பாட்டிசைத்தன, உலகத்தைப் போர்த்தியிருந்த இருள் படலத்தைக் கதிரவன் தங்கக் கலப்பையால் உழுங்காட்சி, கண்கொள்ளாக்காட்சி, காலை வானம் செவ்வொளியால் மலர்ந்து, பாடிப்பறக்கும் அப்பறவைகளைப் பார்த்தால் பசிக்கூடத் தோன்றாது.

**கொட்டும் அருவியின் மாட்சி :**

பசுமை போர்த்திய மலையில் வெள்ளிச் சரிகையாய் உதிர்ந்து, கண்ணுக்கு விருந்தாய், கவிஞனுக்கு சொல்லாக, காடு மேடுதனில் சுற்றித்திரிந்து, தென்றலோடு கைகோர்த்து, முடிவில் கடலில் கலந்து, விலையில்லா அழகை அருவியின் அழகில் கண்டு, பகலவன் மறைந்து பால்மதி முளைக்கும் நேரத்தில் கண்டு மயங்காத மனங்கள் இல்லை.

**இயற்கை சாட்டு :**

தூய வானத்தில் பிறந்த ஏழு வண்ணங்களைக் கண்டு, வான மங்கையை எட்டிப்பிடிக்க வேண்டும் என எண்ணி மலைச்சிகரங்கள் வானளவு உயர்ந்து செல்கின்றன. மரங்கள் பச்சைப்பசலென்று காட்சியளிக்க, இளங்காற்று தென்றலாய் வருட இயற்கையின் அழகில் இதயம் நிறைந்தது. நீர் நிலைகள், காடுகள், விலங்குகள், கடல்கள் ஆகியவற்றை மாசில்லாது காத்திடுவோம்.

**முடிவுரை :**

மனிதர்களின் தேவைக்காக புவியின் இயற்கையை அழிப்பதைத் தடுத்து, இயற்கையைப் பேணிக்காத்து வருங்கால தலைமுறையினருக்கு நாமும் விட்டுச் செல்வோம்.

## மொழியோடு விளையாடு

**திரட்டுக**

**1. கடல் என்னும் பொருள் தரும் வேறு சொற்களைத் திரட்டுக.**

ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பெளவம், பரவை, புணரி என்பவை கடல் என்னும் பொருள் தரும் சொற்களாகும்.

---

**2. தொடர்களைப் பிரித்து இரண்டு தொடர்களாக எழுதுக.**

(**எ.கா**) பல நாள்களாக மழை பெய்யாததால் பயிர்கள் வாடின.

**விடை :** பல நாள்களாக மழை பெய்யவில்லை. பயிர்கள் வாடின.

**1) கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறான்.**

**விடை:** கபிலன் வேலை செய்தான். களைப்புடன் இருக்கிறான்.

**1) இலக்கியா இனிமையாகப் பாடியதால் பரிசு பெற்றாள்.**

**விடை:** இலக்கியா இனிமையாகப் பாடினாள். பரிசு பெற்றாள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. **பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1) பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப் __________ என்று பெயர் (பறவை/ பரவை).

**விடை: பரவை**

2) இலக்கிய மன்ற விழாவில் முகிலன் சிறப்பாக __________ ஆற்றினார். (உரை / உறை)

**விடை: உரை**

3) முத்து தம் __________ காரணமாக ஊருக்குச் சென்றார் .(பனி / பணி) **விடை: பணி**

4) கலைமகள் தன் வீட்டுத் தோட்டத்தைப் பார்க்க வருமாறு தோழியை __________ (அலைத்தாள் / அழைத்தாள்). **விடை: அழைத்தாள்**

4. **பொருத்தமான சொற்களால் கட்டங்களை நிரப்புக.**

1) 'புள்' என்பதன் வேறு பெயர்

| | | |
|---|---|---|
| ப | ற | வை |

2) பறவைகள் இடம்பெயர்தல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வ | ல | சை | போ | த | ல் |

3) சரணாலயம் என்பதன் வேறு பெயர்

| | | | | |
|---|---|---|---|---|
| பு | க | லி | ட | ம் |

5. **வரிசை மாறியுள்ள சொற்களைச் சரியான வரிசையில் அமைத்து எழுதுக.**

**அ)** இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம்.
**விடை:** சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இளங்கோவடிகள் இயற்றினார்.
ஆ) மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது.
**விடை:** மனிதன் இல்லாத உலகில் பறவை வாழ முடியாது.
இ) மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப்பிடித்தார்.
**விடை:** சாண்டியாகோ மிகப்பெரிய மீனைப் பிடித்தார்.
ஈ) மனிதர் இந்தியாவின் டாக்டர் சலீம் அலி பறவை.
**விடை:** இந்தியாவின் பறவை மனிதர் டாக்டர் சலீம் அலி.

6. **கட்டங்களில் சில சொற்கள் மறைந்துள்ளன. குறிப்புகளை கொண்டு அவற்றைக் கண்டுபிடித்து எழுதுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு | த் | த | மி | ழ் | கா |
| ப் | பை | னி | மே | ம | ணி |
| ப | ல் | நி | ல | வு | நி |
| து | ட | லை | ர் | ப | ல |
| லை | க | மே | ணி | ம | ம் |
| செ | ங் | கா | ல் | நா | ரை |

**விடை:**
1. முத்தமிழ்
2. காணிநிலம்
3. மணிமேகலை
4. செங்கால்நாரை
5. நிலவு
6. தனிநிலை
7. முப்பது
8. பல்
9. பல
10. கலை
11. தமிழ்
12. மணி
13. நிலம்

1. இரட்டைக் காப்பியங்களுள் ஒன்று __________. **விடை : மணிமேகலை**
2. முதலெழுத்துகளின் எண்ணிக்கை __________. **விடை : முப்பது**
3. திங்கள் என்பதன் பொருள் __________. **விடை : நிலவு**
4. சத்திமுத்தப் புலவரால் பாடப்பட்ட பறவை __________. **விடை : செங்கால்** நாரை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. பாரதியார் __________ வேண்டும் என்று பாடுகிறார். **விடை : காணிநிலம்**

6. ஆய்த எழுத்தின் வேறு பெயர் __________. **விடை : தனிநிலை**

## ஆய்ந்தறிக.

**பெருகிவரும் மக்களின் தேவைக்காக இயற்கையை அழிப்பது சரியா? இயற்கையைச் சுரண்டாமல், மக்களின் தேவைகளை நிறைவேற்ற மாற்று வழிகள் உண்டா?**

பெருகிவரும் மக்களின் வாழிடங்களுக்காக, விவசாய நிலங்கள் வீடுகளாகவும், போக்குவரத்துத்துறை வளர்ச்சியின் காரணமாக காடுகள் அழிக்கப்பட்டும் வருகின்றன. இது தவறு.

நிலவில் வீடுகள் கட்டி விற்பனை செய்யும் தந்திரங்கள் தெரிந்த மனித மூளைக்கு, இயற்கையைச் சுரண்டாமல் மக்களின் தேவைகளை நிறைவேற்ற மாற்று வழிகள் கண்டுபிடிக்க இயலும். இயற்கை அழிந்தால் நாடு செழிக்காது என்றுணர்ந்த நம் அரசு 1950 ஆம் ஆண்டு முதல் வனத்துறையை ஏற்படுத்திச் செயல்படுத்தி வருகிறது. இது காடுகளின் காப்புக்கும், வளர்ச்சிக்கும் மிகவும் பாடுபட்டு வருகிறது. நாமும் இத்துறையினரோடு இணைந்து, மரங்களை வளர்த்து, மக்களுக்குத் தேவையான காற்று, நீர், உணவு கிடைக்கச் செய்யலாம்.

## கவிதை படைக்க

**கீழே காணப்படும் மழைபற்றிய கவிதையைச் சொந்தத் தொடர்களால் நிரப்புக.**

வானில் இருந்து வந்திடும்
தண்ணீரை எங்கும் தந்திடும்
மனதில் மகிழ்ச்சி தந்திடும்
தரணியில் செழுமை வளர்த்திடும்
மண்ணில் வளத்தைப் பெருக்கிடும்

## கலைச்சொல் அறிவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கண்டம் | - | continent | புகலிடம் | - | Sanctuary |
| வலசை | - | migration | வானிலை | - | weather |
| தட்பவெப்பநிலை | - | climate | புவிஈர்ப்புப்புலம் | - | Gravitational Field |

# இயல் 2

## வாழ்வியல்

## திருக்குறள்

## தொகுதி – I

### ஒரு மதிப்பெண் வினா – பாட வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1.** மக்களுக்கு மகிழ்ச்சி தருவது __________.

அ) ஊக்கமின்மை ஆ) அறிவுடைய மக்கள்

இ) வன்சொல் ஈ) சிறிய செயல் **விடை: ஆ) அறிவுடைய மக்கள்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. ஒருவர்க்குச் சிறந்த அணி __________.
அ) மாலை ஆ) காதணி இ) இன்சொல் ஈ) வன்சொல்

**விடை: இ) இன்சொல்**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

### ஒரு மதிப்பெண் வினா – கூடுதல் வினாக்கள்

1. திருக்குறளை இயற்றியவர் __________. **விடை: திருவள்ளுவர்**
2. திருக்குறள் __________ பெரும் பிரிவுகளைக் கொண்டது. **விடை: மூன்று**
3. திருக்குறளில் __________ அதிகாரங்கள் உள்ளன. **விடை: 133**
4. திருக்குறளில் __________ குறள்கள் உள்ளன. **விடை: 1330**
5. திருக்குறள் __________ நூல்களுள் ஒன்று. **விடை: பதினெண் கீழ்க்கணக்கு**
6. உலகப்பொதுமறை எனப் போற்றப்படும் நூல் __________. **விடை: திருக்குறள்**
7. __________ முதல் எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு. **விடை: அகர**
8. செயற்கரிய செய்வார் __________. **விடை: பெரியார்**
9. அன்பிலார் எல்லாம் __________. **விடை: தமக்குரியர்**
10. __________ வழியது உயிர்நிலை. **விடை: அன்பின்**

## III. பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக

1. இனிய __________ இன்னாத கூறல்
கனியிருப்பக் __________ கவர்ந் தற்று. **விடை: உளவாக, காய்**

2. அன்பிலார் __________ தமக்குரியர் அன்புடையார்
__________ உரியர் பிறர்க்கு **விடை: எல்லாம், என்பும்**

## IV. நயம் அறிக

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார் - இந்தக் குறளில் உள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக

**எதுகை:** செய்யுளின் அடிகளிலோ சீர்களிலோ இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகையாகும்

**அடி எதுகை:** செ**ய**ற்கரிய; செ**ய**ற்கரிய

**சீர் எதுகை:** செ**ய**ற்கரிய - செ**ய்**வார்; செ**ய**ற்கரிய - செ**ய்**கலா

**அடி மோனை:** செ**ய**ற்கரிய; செ**ய**ற்கரிய

**சீர் மோனை:** செ**ய**ற்கரிய செ**ய்**வார்; செ**ய**ற்கரிய செ**ய்**கலா

## V. பின்வரும் செய்திக்குப் பொருத்தமான திருக்குறள் எது எனக் கண்டறிந்து எழுதுக.

2016 ஆம் ஆண்டு ரியோ நகரில் மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் கலந்துகொண்டார். உயரம் தாண்டுதல் போட்டியில் அவர் தங்கப் பதக்கம் பெற்றார். செய்தியாளர்கள் அவருடைய தாயிடம் நேர்காணல் செய்தனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



"என் மகனின் வெற்றி எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அவனைப் பெற்ற பொழுதைவிட இப்போது அதிகமாக மகிழ்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

அ) செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

ஆ) ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

இ) இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

**விடை: ஆ) ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்**

## தொகுதி – II

### VI. குறுவினா – பாட வினா

**1. உயிருள்ள உடல் எது?**

அன்பு இருப்பதுதான் உயிருள்ள உடல். அன்பு இல்லாதது வெறும் உடம்பும் தோலும் தான். "அன்பின் வழியது உயிர் நிலை"

**2. எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது?**

அகரமே எழுத்துகளுக்குத் தொடக்கமாகும். முதலாகிய இறைவனே உலகுக்குத் தொடக்கமாகும்.

**3. அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?**

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் எனக்கே என்பார்கள். அன்பு உடையவர்கள் தம் உடலும் பிறர்க்கே என்பார்கள்.

## கூடுதல் வினாக்கள்

**1. கெடுப்பதும், காப்பதும் மழை– எவ்வாறு?**

உரிய காலத்தில் பெய்யாது கெடுப்பதும் மழைதான். உரிய காலத்தில் பெய்து காப்பதும் மழை தான்.

**2. மக்களுக்கு எது மகிழ்ச்சி தரும்?**

தம்மைவிடத் தம் பிள்ளைகள் அறிவுடையோர் என்றால் மக்களுக்கு அதுதான் மகிழ்ச்சி தருவதாகும்.

**3. தாய் எப்போது மகிழ்ச்சி அடைவாள்?**

தன் பிள்ளையின் புகழைக் கேட்ட தாய், பெற்றெடுத்த போது அடைந்த மகிழ்ச்சியை விடப் பெருமகிழ்ச்சி அடைவாள்.

**4. ஒருவருக்கு மிகச் சிறந்த அணியாவது யாவை?**

பணிவு உடையவனாகவும், இன்சொல் பேசுபவனாகவும் இருத்தல் ஒருவனுக்கு அணிகலனாகும். இவையன்றி உடம்பில் அணிபவை அணிகலன் ஆகாது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**5. திருக்குறள் – நூற்குறிப்புத் தருக?**

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- குறள் வெண்பாக்களால் அமைந்த நூல்.
- திரு என்னும் அடைமொழியைப் பெற்றுத் திருக்குறள் என வழங்கப்படுகிறது.
- அறம்,பொருள், இன்பம் என முப்பெரும் பிரிவுகளை உடையது. நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள் கொண்டது. 1330 குறள்கள் திருக்குறளில் உள்ளன.
- உலகப்பொதுமறை, முப்பால், தமிழ் மறை, உத்தரவேதம், வாயுறை வாழ்த்து எனவும் திருக்குறளை வழங்குவர்.

**6. திருவள்ளுவர்–குறிப்பு வரைக**

- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.
- இவருடைய காலம் கி.மு 31 என்று கூறுவர்.
- இவர் செந்நாப் போதார், முதற்பாவலர், நாயனார், மாதானுபங்கி, பெருநாவலர் என்னும் பெயர்களாலும் அழைக்கப்படுகிறார்.
- சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் வல்லவர்.

# இயல் 3

**எந்திர உலகம் கவிதைப்பேழை**

## அறிவியல் ஆத்திச்சூடி

### தொகுதி – I

**ஒரு மதிப்பெண் வினா – பாட வினாக்கள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. உடல் நோய்க்கு __________ தேவை.
அ) ஔடதம் ஆ) இனிப்பு இ) உணவு ஈ) உடை
**விடை: அ) ஔடதம்**

2. நண்பர்களுடன் __________ விளையாடு.
அ) ஒருமித்து ஆ) மாறுபட்டு இ) தனித்து ஈ) பகைத்து
**விடை: அ) ஒருமித்து**

3. ‘கண்டறி’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.
அ) கண் + அறி ஆ) கண்டு + அறி இ) கண்ட + அறி ஈ) கண் + டறி
**விடை: ஆ) கண்டு+அறி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. ‘ஒய்வற’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) ஒய்வு + அற ஆ) ஒய் + அற இ) ஒய் + வற ஈ) ஒய்வு + வற
**விடை: அ) ஒய்வு+அற**

5. ஏன்+என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.
அ) ஏன்என்று ஆ) ஏனென்று இ) ஏன்னென்று ஈ) ஏனன்று
**விடை: ஆ) ஏனென்று**

6. ஔடதம்+ஆம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.
அ) ஔடதமாம் ஆ) ஔடதம்ஆம் இ) ஔடதாம் ஈ) ஔடதஆம்
**விடை: அ) ஔடதமாம்**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ஆத்திசூடி என்பது ________ வரிசையில் அறிவுரைகளைச் சொல்லும் இலக்கியம்
**விடை: அகர**
2. ஆத்திசூடியை இயற்றியவர் ________ **விடை: ஔவையார்**
3. மேதகு அப்துல்கலாம் அவர்களால் பாராட்டப் பெற்றவர் நெல்லை ________
**விடை: சு. முத்து**

## III. எதிர்ச்சொற்களைப் பொருத்துக

| | | | விடை |
|---|---|---|---|
| அணுகு | - | தெளிவு | விலகு |
| ஐயம் | - | சோர்வு | தெளிவு |
| ஊக்கம் | - | பொய்மை | சோர்வு |
| உண்மை | - | விலகு | பொய்மை |

## IV. பாடல் வரிகளுக்கேற்றவாறு முறைப்படுத்துக.

1. சிந்தனை கொள் அறிவியல் - அறிவியல் சிந்தனை கொள்
2. சொல் தெளிந்து ஐயம் - ஐயம் தெளிந்து சொல்
3. கேள் ஏன் என்று - ஏன் என்று கேள்
4. வெல்லும் என்றும் அறிவியலே - என்றும் அறிவியலே வெல்லும்

## V. பொருள் தருக.

| | | |
|---|---|---|
| இயன்றவரை | - | முடிந்தவரை |
| ஐயம் | - | சந்தேகம் |
| ஒருமித்து | - | ஒன்றுபட்டு |
| ஔடதம் | - | மருந்து |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## தொகுதி – II

### VI. குறுவினா – பாட வினா

**1. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?**

- மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது அவர்களது அனுபவமே ஆகும்.
- பட்டறிவு ஒரு மனிதனை நல்ல மனிதனாக செதுக்கி உருவாக்கும்.

### VII. சிறுவினா

**1. பாடலின் கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.**

- வாழ்வில் அறிவியல் சிந்தனைகளை வளர்த்துக்கொள்.
- புதியன படைக்க ஆய்வில் மூழ்கி அதிகம் உருவாக்கு.
- வாழ்வில் மகிழ்வாக வாழ இயன்றவரை எல்லோரையும் புரிந்து கொள்ளப்பழகு.
- பிறரை அன்பு செய்ய ஈடுபாட்டோடு அணுகு .
- எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் உண்மையான பொருளை கண்டறிய முற்படு.
- வாழ்வில் ஊக்கம் எப்போதும் வெற்றியைத் தரும்.
- எப்பொழுதும் அறிவியலே வெற்றியைத் தரும்.
- என்றும் தெளிவடைய வேண்டுமென்றால் ஏன் என்று கேட்க வேண்டும்.
- யாரிடமாவது எதையாவது கூறவிரும்பினால் ஐயம் இல்லாமல் தெளிந்தவற்றை சொல்
- எப்பொழுதும் பிறரோடு ஒன்றுபட்டு செயல்பட்டால் வெற்றியைக் காண்பாய்
- ஓய்வில்லாமல் உழைத்தால் தான் வாழ்வில் உயர்நிலை அடைய முடியும்.
- நம் வாழ்வில் நாம் பயன்படுத்தும் மருந்து நம் அனுபவமாகும்.

### VIII. சிந்தனைவினா

**1. உங்களுக்குத் தெரிந்த மருத்துவ முறைகள் யாவை?**

உலகில் பல மருத்துவமுறைகள் உள்ளன.

**ஆங்கில மருத்துவம் (அலோபதி)**
**சித்த மருத்துவம் (தென்னிந்தியா)**
**ஆயுர்வேத மருத்துவம் (வட இந்தியா)**
**ஹோமியோபதி மருத்துவம் (ஜெர்மன்)**
**யுனானி மருத்துவம் (அரேபியா)**
**அக்குபஞ்சர் மருத்துவம் (சீனா)**
**யோக மருத்துவம் (இந்தியா)**

போன்ற மருத்துவமுறைகள் மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன.

உலகில் பெரும்பாலான மக்களால் ஆங்கில மருத்துவம் பின்பற்றப்பட்டு வருகிறது. உடனடி குணம் தரக்கூடிய மருத்துவம் இம்மருத்துவத்தில் உள்ளது.

'மருந்தாகித் தப்பா மரத்தற்றால்' என்னும் திருக்குறள் வரி, தமிழ் மருத்துவத்தின் தொன்மையை எடுத்தியம்பும். பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்த மருத்துவமாயிற்று, உலகில் பின் விளைவுகளற்ற மருத்துவங்களுள் சித்த மருத்துவமும் ஒன்று. இயற்கை மருத்துவம் என்னும் மருந்தில்லா மருத்துவமுறையை அன்றே நம் தமிழர் கண்டறிந்துள்ளனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ஹோமியோபதி மருத்துவம் ஜெர்மன் நாட்டினரால் கொண்டுவரப்பட்டதாகும். மிக மெதுவாக குணம் தரக் கூடியது . ஆனால் நெடுநாள் பிணிகளால் பாதிக்கப்பட்டோர் விரைவில் குண-மடைய இம்மருத்துவம் பெரிதும் வழிவகுக்கிறது.

**முடிவுரை**

'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பார் திருமூலர். ஆகவே உடல் நலத்தைப் பேணிப்பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமையாகும்.

## IX. கற்பவை கற்றபின்

**1. 'அறிவியல் ஆத்திசூடி' பகுதியில் உங்களுக்குப் பிடித்த அடியை எழுதி அதன் காரணத்தைக் கூறுக.**

அறிவியல் ஆத்திசூடி பகுதியில் 'ஊக்கம் வெற்றிதரும்' என்பது எனக்குப் பிடித்த அடியாகும். ஊக்கத்தை கைவிடக்கூடாது. ஒருவனுடைய வாழ்வில் வெற்றியை அடைய வேண்டு மென்றால் ஊக்கம் இருந்தால் தான் அதை பெற முடியும். ஊக்கமே என்றும் உயர்வைத் தரும்.

**2. அறிவியல் சிந்தனையைத் தூண்டும் முழக்கத் தொடர்கள் ஐந்து உருவாக்குக.**

(எ.கா) அறிவியலை வளர்ப்போம்! உலகை வெல்வோம்!

1. அறிவியல் அறிவே ஆக்கத்தின் வெற்றி
2. அறிவியலை வளர்ப்போம். சாதனை படைப்போம்
3. அறிவியலை படிப்போம். அறிஞராய் உயர்வோம்.
4. அறிவியலின் தேவை. அகிலத்தின் பாதை.

# இயல் 3

## கவிதைப்பேழை

# அறிவியலால் ஆள்வோம்

## தொகுதி – I

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**ஒரு மதிப்பெண் வினா – பாட வினாக்கள்**

**1.** மனிதன் எப்போதும் உண்மையையே _________.

அ) உரைக்கின்றான் ஆ) உரைகின்றான்

இ) உறைகின்றான் ஈ) உரைகின்றான்

**விடை: ஈ) உரைக்கின்றான்**

**2.** ஆழ்க்கடல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________

அ) ஆழமான + கடல் ஆ) ஆழ் + கடல்

இ) ஆழ + கடல் ஈ) ஆழம் + கடல்

**விடை: ஆ) ஆழ் + கடல்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



3. விண்வெளி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) விண்+வளி ஆ) விண்+வெளி இ) விண் + ஒளி ஈ) விண்வொளி

**விடை: ஆ) விண்+ வெளி**

4. நீலம்+வான் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________

அ) நீலம்வான் ஆ) நீளம்வான் இ) நீலவான் ஈ) நீலவ்வான்

**விடை: இ) நீலவான்**

5. இல்லாது + இயங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்________

அ) இல்லாதுஇயங்கும் ஆ) இல்லாஇயங்கும்

இ) இல்லாதியங்கும் ஈ) இல்லதியங்கும்

**விடை: இ) இல்லாதியங்கும்**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. அறிவியல் ஆய்வுக்கு ________ இல்லை. **விடை: எல்லை**
2. மனிதனின் ________ எந்திர மனிதனை மனிதரே படைக்கின்றனர். **விடை: நகலாக**
3. _______ விண்ணில் ஏவி செய்தித்தொடர்பில் சிறக்கின்றான். **விடை : செயற்கைக்கோளை**
4. _______ பிளந்து ஆற்றலை எடுத்து அனைத்தும் செய்து பார்க்கிறான். **விடை : அணுவைப்**

## III. சேர்த்து எழுதுக.

விண்வெளி + பாதை - விண்வெளிப்பாதை

செயற்கை + கோள் - செயற்கைக்கோள்

நீலம் + வானின் - நீல வானின்

அணுவை + பிளந்து - அணுவைப் பிளந்து

இணையம் + வலை - இணைய வலை

## தொகுதி – II

## IV. நயம் அறிக

**1. பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எழுதுக.**

செய்யுளின் அடிகளிலோ, சீர்களிலோ முதல் எழுத்து ஒன்று போல் வருவது மோனை எனப்படும்.

**அடிமோனை**

1. **ஆ**ழக் **நீ**லவானின் **செ**யற்கைக்
**ஆ**ய்வுகள் **நி**லவில் **செ**ய்தித்

2. **எ**லும்பும் **உ**றுப்பை **நா**ளை
**எ**ந்திர **உ**டலும் **ந**கரம்

**சீர்மோனை**

**ஆ**ழக்கடலின் **அ**டியில் மூழ்கி

**செ**ய்தித் தொடர்பில் **சி**றக்கின்றான்

**உ**டலும் **உ**யிரும் காக்கின்றான்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எழுதுக.**

செய்யுளின் அடிகளிலோ சீர்களிலோ இரண்டாம் எழுத்து ஒன்று போல் வருவது எதுகை எனப்படும்.

**அடிஎதுகை** நீ**ல** வானின்
நி**ல**வில்

**3. பாடலில் இடம்பெற்றுள்ள இயைபுச் சொற்களை எழுதுக**

செய்யுளின் இறுதிச்சீர் ஒரே வடிவில் வருவது இயைபு நயமாகும்.

பார்க்**கின்றான்** - நினைக்**கின்றான்**
சிறக்**கின்றான்** - உரைக்**கின்றான்**
படைக்**கின்றான்** - கொடுக்**கின்றான்**
காக்**கின்றான்** - பார்க்**கின்றான்**
வாழ்ந்திடு**வான்** - அமைத்**திடுவான்**

## V. குறுவினா – பாட வினா

**1. செயற்கைக்கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது?**

- செயற்கைக் கோள் விண்ணில் ஏவி நிலை நிறுத்தப்படும்.
- நீள்வட்டப்பாதையில் அது சுற்றிவரும்.
- அது தரும் தகவல்கள், புகைப்படங்கள் நமக்கு பல விதங்களில் பயன்படுகிறது.
- செய்தித்தொடர்புகள் விரைவாக கிடைக்கிறது.
- மண்ணில், கடலில் புதைந்துக் கிடக்கும் இயற்கை வளங்களைக் கண்டறிய உதவுகிறது.
- புயல் எச்சிரிக்கை விடுக்கவும், மழை பற்றிய செய்திகளை முன்னறிவிக்கவும் செயற்கைக்கோள் பெரிதும் உதவுகிறது.

**2. நாளைய மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?**

- நாளைய மனிதன் மண்ணில் மட்டுமல்ல விண்ணில் உள்ள கோள்களில் எல்லாம் வீடுகட்டி நகரம் அமைத்து வாழ்ந்திடுவான்.
- தினமும் பல முறை பயணம் செய்ய விண்வெளியில் பாதை அமைத்து இன்பச்சுற்றுலா செல்வான்.

## கூடுதல் வினாக்கள்

**1. எந்திர மனிதன் பற்றி குறிப்பு தருக.**

- மனிதர்கள் தாங்கள் செய்யும் செயல்களை எந்திரங்களைக் கொண்டு செய்யும் வகையில் உருவாக்குவதே எந்திர மனிதன். மனிதர்கள் செய்ய முடியாத பணிகளையும் எந்திரமனிதர்கள் செய்கிறார்கள்.
- எலும்பும் இல்லாமல் தசையும் இல்லாமல் கை, கால் போன்ற உறுப்புகளுடன் சாதனை படைக்கும் எந்திர மனிதனை மனிதன் படைக்கின்றான்.

**2. உறுப்பு மாற்றும் மருத்துவம் பற்றி விளக்குக.**

- மனிதனின் பழுதுபட்ட உறுப்பை மாற்றி அமைக்கும் மருத்துவ முறைக்கு உறுப்பு மாற்றும் மருத்துவம் என்று பெயர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- சிறுநீரகம், கல்லீரல், இதயம் போன்றவற்றை மாற்றி அமைக்கும் முறை ஒருவர் உடலில் வைத்து செயல்படுத்தும் உறுப்பு மாற்றும் மருத்துவத்தால் மனித உயிர்கள் மீண்டும் பொலிவுடன் வாழ்கின்றன.

## VI. சிந்தனை வினா

**1. எவற்றுக்குப் புதிய கண்டுபிடிப்புகள் தேவை என்பது பற்றிச் சிந்தித்து எழுதுக**

மனிதனின் தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க புதிய கண்டுபிடிப்புகளும் ஏற்படுகின்றன.

- விரைந்து உணவு தயாரிப்பதற்கான கண்டுபிடிப்புகள் தேவை.
- மின்சாரத்தை மிச்சப்படுத்துவதற்கான கண்டுபிடிப்புகள் தேவை.
- தானியங்கி இருசக்கர, நான்கு சக்கர வாகனங்கள் உற்பத்திக்கான கண்டுபிடிப்புகள் தேவை.

**2. இதுவரை எத்தனை கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன? அவை யாவை?**

இது வரை பத்து கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சூரியன், பூமி , புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகியன ஆகும்.

**3. இந்தியா அண்மையில் நிலவுக்கு அனுப்பிய செயற்கைக்கோளின் பெயர் யாது?**

இஸ்ரோ 104 என்ற செயற்கைக்கோள் நிலவுக்கு அண்மையில் அனுப்பப்பட்டது.

# இயல் 3

## உரைநடைஉலகம்

## கணியனின் நண்பன்

## தொகுதி – I

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**ஒரு மதிப்பெண் வினா – பாட வினாக்கள்**

1. நுட்பமாகச் சிந்தித்து அறிவது __________.

அ) நூலறிவு ஆ) நுண்ணறிவு இ) சிற்றறிவு ஈ) பட்டறிவு

**விடை: ஆ) நுண்ணறிவு**

2. தானே இயங்கும் எந்திரம் __________.

அ) கணினி ஆ) தானியங்கி இ) அலைபேசி ஈ) தொலைக்காட்சி

**விடை: ஆ) தானியங்கி**

3. 'நின்றிருந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

அ) நின்+றிருந்த ஆ) நின்று+இருந்த இ) நின்றி + இருந்த ஈ) நின்றி + ருந்த

**விடை: ஆ) நின்று+இருந்த**

4. 'அவ்வுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

அ) அவ்வு+ருவம் ஆ) அ+உருவம் இ) அவ்+வுருவம் ஈ) அ+வுருவம்

**விடை: ஆ) அ+உருவம்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. மருத்துவம்+துறை என்பதனைச் சேர்த்து எழுதக்கிடைக்கும் சொல் ________
அ) மருத்துவம்துறை ஆ) மருத்துவதுறை
இ) மருந்துதுறை ஈ) மருத்துவத்துறை
**விடை: ஈ) மருத்துவத்துறை**

6. செயல்+இழக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________
அ) செயலிழக்க ஆ) செயல்இழக்க இ) செயஇழக்க ஈ) செயலிலக்க
**விடை: அ)செயலிழக்க**

7. நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ________
அ) போக்குதல் ஆ) தள்ளுதல் இ) அழித்தல் ஈ) சேர்த்தல்
**விடை: ஈ) சேர்த்தல்**

8. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ________
அ) அரிது ஆ) சிறிது இ) பெரிது ஈ) வறிது
**விடை: அ) அரிது**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.(கூடுதல் வினாக்கள்)

1. மனிதன் தன் வேலைகளை எளிதாக்கக் கண்டுபிடித்தவை ________ **விடை: தானியங்கிகள்**
2. தானியங்கிகளுக்கும், எந்திரமனிதர்களுக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு ________ **விடை: செயற்கை நுண்ணறிவு**
3. உலக சதுரங்க வீரரை வெற்றிகொண்ட மீத்திறன் கணினியின் பெயர் ________ **விடை: டீப்புளூ**
4. ‘சோபியா’ ரோபோவுக்குக் குடியுரிமை வழங்கிய நாடு ________ **விடை: சவுதி அரேபியா**
5. ________ செய்ய முடியாத பணிகளையும் எந்திரங்கள் செய்கின்றன. **விடை: மனிதர்கள்**
6. எந்திர மனிதனை ________ என்றும் அழைப்பார்கள். **விடை:ரோபோ**
7. ரோபோ என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் ________ **விடை: காரல்கபெக்**
8. ரோபோ என்ற சொல்லுக்கு ________ என்று பொருள் **விடை: அடிமை**
9. மனிதர்கள் தம் வேலைகளை எளிதாகச் செய்ய கண்டுபிடித்த எந்திரங்களை இயக்குவதற்கு ________ மனிதன் கண்டுபிடித்தான். **விடை: தானியங்கிகளை**
10. மனித முயற்சிகளுக்கு மாற்றாக தானே இயங்கும் எந்திரம் ______ ஆகும். **விடை : தானியங்கி**
11. உலகச் சதுரங்க வெற்றியாளர் ________ **விடை : கேரிகேஸ்புரோவ்**
12. உலகிலேயே முதன்முதலாக ________ நாடு ஒரு ரோபோவுக்குக் குடியுரிமை வழங்கியுள்ளது. **விடை: சவுதி அரேபியா**
13. ஐக்கிய நாடுகள் சபை புதுமைகளின் வெற்றியாளர் என்னும் பட்டத்தைச் ________ வுக்கு வழங்கியுள்ளது. **விடை: சோபியா**

## III. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. தொழிற்சாலை –
**விடை:** ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தொழிற்சாலைகள் தேவை
2. உற்பத்தி –
**விடை:** வேளாண்மை உற்பத்திப் பொருள்களின் விளைச்சலைப் பெருக்க வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. ஆய்வு -

**விடை:** நாட்டின் முன்னேற்றங்களுக்கு வகுக்கப்படும் திட்டங்களைச் செயற்படுத்துதல் பற்றிய ஆய்வு அவ்வப்போது நடத்த வேண்டும். (அல்லது)

அதிகாரிகளால் பள்ளிகளில் அவ்வப்போது ஆய்வு நடத்தப்படுவதுண்டு.

4. செயற்கை -

**விடை:** விளையாட்டு மைதானங்களில் செயற்கை புல்வெளி விளையாட்டுத் திடல்கள் அமைக்கப்படுகின்றன.

5. நுண்ணறிவு - **விடை:** ஒவ்வொரு மனிதருக்கும் நுண்ணறிவு வேறுபடும்.

## IV. சேர்த்து எழுதுக.

| | | |
|---|---|---|
| மருத்துவம் + துறை | = | மருத்துவத்துறை |
| செயற்கை + கோள்கள் | = | செயற்கைக் கோள்கள் |
| எந்திரம் + மனிதர்கள் | = | எந்திர மனிதர்கள் |
| அலுவலகம் + வேலை | = | அலுவலக வேலை |
| துருவம் + பகுதிகள் | = | துருவப்பகுதிகள் |

## தொகுதி – II

### V. குறு வினாக்கள் – பாட வினாக்கள்

1. **'ரோபோ' என்னும் சொல் எவ்வாறு உருவானது?**

- காரல் கபெக் என்ற செக்கோஸ்லோவேகியா நாட்டைச் சேர்ந்தவர் 1920 ஆம் ஆண்டு ஒரு நாடகத்தை எழுதினார்.
- அந்நாடகத்தில் ரோபோ என்னும் சொல்லை முதன்முதலாகப் பயன்படுத்தினார்.
- ஒரு தொழிற்சாலையில் ரோபோக்கள் வேலை செய்வதாக அந்த நாடகத்தில் காட்சிகளை அமைத்திருந்தார். இவ்வாறு ரோபோ என்னும் சொல் வழக்கத்திற்கு வந்தது.

2. **'டீப் புளூ'– மீத்திறன் கணினி பற்றி எழுதுக**

- ஐ.பி.எம் என்னும் நிறுவனம் உருவாக்கிய மீத்திறன் கணினிக்குப் பெயர் டீப் புளூ ஆகும்.
- உலகச் சதுரங்க வெற்றியாளர் கேரிகேஸ்புரோவ் என்பவருடன் இக்கணினி போட்டியிட்டது.
- இச்சதுரங்கப் போட்டியில் டீப் புளூவே வெற்றி வாகை சூடியது.

## கூடுதல் வினாக்கள்

1. **தானியங்கிகள் பற்றி குறிப்பு தருக**

நுட்பமான, கடினமான, ஒரே மாதிரியான வேலைகளை மனிதரை விட விரைவாகத் தானே செய்து முடிக்கும் எந்திரமே தானியங்கி ஆகும்.

2. **தானியங்கிகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன?**

தானியங்கிகள் பயன்படும் இடத்திற்கு ஏற்ற வகையில் எந்திரக் கைகள், நகரும் கால்கள், சூழ்நிலைகளை உணர்வதற்கான நுண்ணுணர்வுக் கருவிகள் ஆகியவற்றுடன் உருவாக்கப்படுகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## VI. சிறுவினாக்கள் – பாடவினாக்கள்

**1. எந்திரமனிதனின் பயன்களை விளக்குக.**

- பல விளையாட்டுப் போட்டிகளில் விளையாடுகின்றன.
- உணவகங்களில் உணவு பரிமாறுகின்றன.
- பொது இடங்களில் வழிகாட்டுகின்றனர்.
- வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்கின்றனர்.
- மனித இனத்தின் வளர்ச்சிக்கு உதவிபுரிகிறார்கள்.
- பொழுதுபோக்கு நிகழ்வுகளில் பங்குபெறுகிறார்கள்.

**2. துருவப் பகுதிகளில் ஆய்வு செய்ய எந்திரமனிதர்களை அனுப்புவதன் காரணம் யாது?**

- உலகில் மனிதர்கள் செல்ல முடியாத இடங்கள் பல உள்ளன. துருவப்பகுதிகளுக்கு மனிதர்களால் செல்ல இயலாது.
- துருவப்பகுதிகளுக்கு எளிதாகச் சென்று ஆய்வு நடத்த எந்திர மனிதர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்.
- விரைவாக, எளிதாக வேலைகளை முடிக்க எந்திர மனிதர்கள் பயன்படுகிறார்கள்.

## கூடுதல் வினாக்கள்

**1. தானியங்கிகளின் பயன்கள் யாவை?**

- தானியங்கிகள் பல தொழில் நிறுவனங்களில் பயன்பட்டு வருகின்றன.
- இவை பயன்படும் இடத்திற்கு ஏற்றவகையில் எந்திரக் கைகள், நகரும் கால்கள். சூழ்நிலைகளை உணர்வதற்கான நுண்ணுணர்வுக் கருவிகள் ஆகியவற்றுடன் உருவாக்கப்படுகின்றன.
- தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் தானியங்கிகள் உற்பத்திசெய்தல், பழுதுகளை நீக்குதல் போன்ற பணிகளைச் செய்கின்றன.
- மருத்துவத் துறைகளில் நோயின் அறிகுறிகளைக் கண்டுபிடிக்கவும். மருத்துவம் பார்க்கவும் பயன்படுத்தப்படுகின்றன.
- சிக்கலான அறுவை சிகிச்சைகளைச் செய்யவும் பயன்படுகின்றன.
- பிற கோள்களுக்குச் சென்று ஆய்வு நடத்தவும் செயற்கைக் கோள்களை இயக்கவும் தானியங்கிகள் பயன்படுகின்றன.
- உலகில் மனிதர்கள் செல்ல முடியாத பல இடங்களுக்குச் சென்று ஆய்வு நடத்தவும் இவை உதவுகின்றன.

## VII. சிந்தனை வினா

**1. உங்களுக்கென ஒரு எந்திரமனிதன் இருந்தால் அதை எதற்கெல்லாம் பயன்படுத்துவீர்கள் எனச் சிந்தித்து எழுதுக.**

- நான் தினமும் பல்துலக்க. குளிக்க. சாப்பிட பயன்படுத்துவேன்.
- வாகனங்களில் விழிப்புடன், சரியான பாதையில் இடத்திற்கேற்ற வேகத்தில் செல்ல பயன்படுத்துவேன்.
- பிறரோடு கைகுலுக்கவும், வாழ்த்து தெரிவிப்பதற்கும் பயன்படுத்துவேன்.



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- தினமும் உலாத்தலில் (walking) என்னோடு பேசிக்கொண்டே நடப்பதற்குத் துணையாகப் பயன்படுத்திக் கொள்வேன்.
- தனியாக இருக்கும் போது பொழுதுபோக்க சில விளையாட்டுகளை விளையாடி மகிழ பயன்படுத்திக் கொள்வேன்.

# இயல் 3

## விரிவானம்

## ஒளி பிறந்தது

### அப்துல் கலாமுடன் நேர்காணல்

### தொகுதி – I

### நெடு வினா

**1. சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல் கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

- வேளாண்மை பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்தமையால் உணவு உற்பத்தி செய்-தமையால் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளோம்.
- செயற்கைக் கோள்கள் பலவற்றை விண்ணில் செலுத்தி தகவல் தொழில் நுட்பத்துறையில் மிகுதியான வளர்ச்சி பெற்றுள்ளோம்.
- நம் நாட்டு செயற்கைச்கோள்களை மட்டுமல்ல எவ்வகையான செயற்கைக் கோள்களையும் ஏன் மற்ற நாடுகளின் செயற்கைக் கோள்களையும் ஏவும் திறன் நம்மிடம் உள்ளது.
- அணு உலைகள் மூலம் மின்சாரம் தயாரிப்பதில் முன்னணியில் உள்ளோம்.
- நவீன மருந்துகளும் பாரம்பரிய மருத்துவமுறைகளும் வளர்ச்சி பெற்றுள்ளன.
- பாதுகாப்புத் துறையைப் பொறுத்தவரை அக்னி மற்றும் பிரிதிவி ஏவுகணைகளைச் செலுத்-துவதில் வெற்றி பெற்றுள்ளோம்.

**2. தமக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல் கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?**

**போலியோ**

- இந்தியாவில் போலியோவினால் எண்ணற்றறோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- போலியோவினால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று கிலோ எடையுள்ள செயற்கைக்கால்களைப் பொருத்திக் கொண்டு சிரமப்பட்டு நடப்பதை அப்துல்கலாம் கண்ணுற்றார். அவர்களின் வேதனையைத் தம் வேதனையாகக் கருதினார் அப்துல்கலாம். அதனால் பாதுகாப்புக் கருவிகளில் பயன்படுத்தப்படும் கார்பன் இழையை கொண்டு முந்நூறு கிராம் எடையில் செயற்கைக் கால்கள் உருவாக்கப்பட்டன.
- விலை குறைவான எடைக்குறைவான அத்தகைய செயற்கைக் கால்களை ஊனமுற்றவர்கள் பொருத்திக்கொண்டு மகிழ்வுடன் நடந்த நிகழ்ச்சியே தனக்கு பெரிதும் மனமகிழ்வை அளித்ததாக அப்துல்கலாம் குறிப்பிடுகிறார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

**1. அப்துல்கலாம் அவர்களுடன் நேர்காணல் நிகழ்வில் அவர்கூறிய அறிவியல் ஆர்வம் பற்றிய தகவல்களைக் குறிப்பிடுக**

**அறிவியல் மீது ஆர்வம்**

➢ அப்துல்கலாம் பத்துவயதுச் சிறுவனாக இருந்தபோது அவரது அறிவியல் ஆசிரியர் பறவைகள் எப்படிப் பறக்கின்றன என்பதனை விளக்கிக் கூறினார்.

➢ அன்று முதல், வானில் பறக்க வேண்டும் என்பது அவரது வாழ்க்கையின் குறிக்கோள் ஆகிவிட்டது. இதுவே அறிவியல் ஆர்வத்தின் தொடக்கமாகும்.

**2. அப்துல்கலாமுக்கு மிகவும் பிடித்த நூல் எது? ஏன்.**

**பிடித்த நூல்கள்**

➢ உலகப் பொதுமறையாகத் திகழும் திருக்குறள் தான் அவருக்கு பிடித்த நூலாகும்.

➢ "அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்கல் ஆகா அரண்" என்னும் குறள் அவர் வாழ்க்கைக்கு வலு சேர்த்தது.

➢ லிலியன் வாட்சன் எழுதிய, 'விளக்குகள் பல தந்த ஒளி' என்னும் நூலும் அவருக்குப் பிடிக்கும். அதைப் படித்தபோது அறிவு, தன்னம்பிக்கை, மகிழ்ச்சி ஆகிய மூன்றையும் பெற்றதாக அவர் கூறுகிறார்.

**3. நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா எப்படி இருக்கும் என அப்துல்கலாம் குறிப்பிடுகிறார்?**

**கல்விமுறை:** ஆயிரம் வருடங்களுக்கு முன்பு நாளந்தா பல்கலைக்கழகத்தில் இருந்ததைப் போல வலுவான கல்விமுறை இருக்கும்.

**சூரிய சக்தி:** அனைத்து இயற்கை வளங்களும் தீர்ந்து போயிருக்கும், ஆயினும் நாம் தயாரித்து அனுப்பிய செயற்கைக் கோள்கள் சூரிய சக்தியைப் பெற்று நமக்கு அளிக்கும்.

**செவ்வாய்க்கோளில் மனிதன்:** யாரும் எளிதில் செல்லமுடியாத செவ்வாய் கோளில் மனித இனம் குடியேறி வாழமுடியும்.

**4. வளரும் இந்தியாவிற்கான குழந்தைகளின் பங்காக அப்துல்கலாம் கூறுவன யாவை?**

➢ மாணவர்கள் எந்தத் துறையைத் தேர்ந்தெடுத்துக் கற்றாலும் அதில் உயர்ந்த குறிக்கோளை மனதில் கொள்ள வேண்டும்.

➢ அக்குறிக்கோளுக்கான அறிவையும் அனுபவத்தையும் சேகரித்துக் கொள்ளவேண்டும்.

➢ கடின உழைப்பால் வெற்றிபெற வேண்டும். அவ்வெற்றி இந்தியாவின் வெற்றிக்கு உதவ வேண்டும்.

**5. வெற்றியடையும் வழிகளாக அப்துல்கலாம் கூறுவன யாவை?**

வெற்றிபெறுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

1. அறிவை வளர்க்கும் அனைவரின் பேச்சையும் உற்று கவனியுங்கள்.
2. வியர்வை! வியர்வை! வியர்வை. அதாவது வியர்வை சிந்தி உங்கள் உழைப்பை, முயற்சியை வெற்றியாக்குங்கள் என்று பொருள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## II. நெடு வினா (கூடுதல் வினா)

**1. அப்துல்கலாம் நேர்காணலில் இடம் பெறும் நிகழ்வுகளைத் தொகுத்து எழுதுக.**

**அறிவியல் மீது ஆர்வம்**

அப்துல்கலாம் பத்துவயதுச் சிறுவனாக இருந்தபோது அவரது அறிவியல் ஆசிரியர் பறவைகள் எப்படிப் பறக்கின்றன என்பதனை விளக்கிக் கூறினார். ஆன்று முதல், வானில் பறக்க வேண்டும் என்பது அவரது வாழ்க்கையின் குறிக்கோள் ஆகிவிட்டது. இதுவே அறிவியல் ஆர்வத்தின் தொடக்கமாகும்.

**பிடித்த நூல்கள்**

- உலகப் பொதுமறையாகத் திகழும் திருக்குறள் தான் அவருக்கு பிடித்த நூலாகும்.
- "அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்கல் ஆகா அரண்" என்னும் குறள் அவர் வாழ்க்கைக்கு வலு சேர்த்தது.
- லிலியன் வாட்சன் எழுதிய, 'விளக்குகள் பல தந்த ஒளி' என்னும் நூலும் அவருக்குப் பிடிக்கும். அதைப் படித்தபோது அறிவு, தன்னம்பிக்கை, மகிழ்ச்சி ஆகிய மூன்றையும் பெற்றதாக அவர் கூறுகிறார்.

**நூறு ஆண்டுகளுக்குப் பின் இந்தியா:**

**கல்விமுறை:** ஆயிரம் வருடங்களுக்கு முன்பு நாளந்தா பல்கலைக்கழகத்தில் இருந்ததைப்போல வலுவான கல்விமுறை இருக்கும்.

**சூரிய சக்தி:** அனைத்து இயற்கை வளங்களும் தீர்ந்து போயிருக்கும். ஆயினும் நாம் தயாரித்து அனுப்பிய செயற்கைக் கோள்கள் சூரிய சக்தியைப் பெற்று நமக்கு அளிக்கும்.

**செவ்வாய்க்கோளில் மனிதன்:** யாரும் எளிதில் செல்லமுடியாத செவ்வாய்க் கோளில் மனித இனம் குடியேறி வாழமுடியும்.

**வளரும் இந்தியாவில் குழந்தைகளின் பங்கு:**

- மாணவர்கள் எந்தத் துறையைத் தேர்ந்தெடுத்துக் கற்றாலும் அதில் உயர்ந்த குறிக்கோளை மனதில் கொள்ள வேண்டும்.
- அக்குறிக்கோளுக்கான அறிவையும் அனுபவத்தையும் சேகரித்துக் கொள்ளவேண்டும்.
- கடின உழைப்பால் வெற்றிபெற வேண்டும். அவ்வெற்றி இந்தியாவின் வெற்றிக்கு உதவ வேண்டும்.

**வெற்றியடையும் வழிகள்:**

வெற்றிபெறுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

1. அறிவை வளர்க்கும் அனைவரின் பேச்சையும் உற்று கவனியுங்கள்.
2. வியர்வை! வியர்வை! வியர்வை. அதாவது வியர்வை சிந்தி உங்கள் உழைப்பை, முயற்சியை வெற்றியாக்குங்கள் என்று பொருள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 3

## கற்கண்டு

## மொழி முதல், இறுதி எழுத்துகள்

### தொகுதி – I

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. மொழி என்பதற்குச் __________ என்னும் பொருளும் உண்டு. **விடை: சொல்**
2. உயிர் எழுத்துகள்__________ சொல்லின் முதலில் வரும் **விடை: பன்னிரண்டும்**
3. இக்காலத்தில் __________ என்னும் சொல் தனித்து இயங்காமல் அங்ஙனம், இங்ஙனம் என்னும் சொற்களில் மட்டுமே வழங்கி வருகிறது. **விடை: ஙனம்**
4. __________ பதினெட்டும் சொல்லின் முதலில் வராது. **விடை: மெய்யெழுத்துகள்**
5. ஆய்த எழுத்து சொல்லின் __________ வராது. **விடை: முதலிலும் இறுதியிலும்**
6. ஆய்த எழுத்து சொல்லின்__________ மட்டுமே வரும். **விடை: இடையில்**

### தொகுதி – II

### II. சிறு வினாக்கள் – பாட வினாக்கள்

**1. மொழிக்கு முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் யாவை?**

➢ க, ச, த, ந, ப, ம ஆகிய வரிசைகளில் உள்ள எல்லா உயிர்மெய் எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்

➢ ங, ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்துவரிசைகளில் சில எழுத்துகள் மட்டுமே சொல்லின் முதலில் வரும்.

➢ ஞ, ஞ ஞெ, ஞொ, ய, யா, யு யூ, யௌ, வ, வா, வி, வீ வெ, வே, வை முதலியன.

---

**2. மொழிக்கு இறுதியில் வாரா மெய்யெழுத்துகள் யாவை?**

➢ க், ங், ச், ட், த், ப், ற் ஆகிய ஏழு மெய் எழுத்துகளும் சொல்லின் இறுதியில் வராது.

➢ ஆய்த எழுத்து சொல்லின் இறுதியில் வராது.

---

**3. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்துகள் எவை?**

➢ மெய் எழுத்து பதினெட்டும் சொல்லின் இடையில் வரும்.

➢ உயிர்மெய் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும்.

➢ ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

**1. மொழிக்கு முதலில் வராத எழுத்துகள் யாவை?**

- மெய்யெத்துகள் பதினெட்டும் சொல்லின் முதலில் வராது.
- ட, ண, ல, ழ, ள, ற, ன ஆகிய எட்டு உயிர்மெய் எழுத்துகளின் வரிசையில் ஓர் எழுத்து கூடச் சொல்லின் முதலில் வராது.
- ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.
- ங,ஞ,ய,வ ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில் மொழி முதலில் வருவதாகக் குறிப்பிடப்பட்ட எழுத்துகள் தவிர பிற எழுத்துகள் சொல்லின் முதலில் வராது.

**2. மொழியில் இறுதியில் வரும் எழுத்துகள் யாவை?**

- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மெய்யுடன் இணைந்து உயிர்மெய்யாக மட்டுமே மொழி இறுதியில் வரும்.
- ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ் ,ழ். ள், ன் ஆகிய மெய்யெழுத்துகள் பதினொன்றும் மொழியின் இறுதியில் வரும்.

## மொழியை ஆள்வோம்!

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1921 ஆம் ஆண்டு மத்திய தரைக் கடலில், ஒரு கப்பல் இங்கிலாந்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. தமிழர் ஒருவர் கப்பலின் மேல்தளத்தில் நின்று கடல் அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென அவரது உள்ளத்தில் கடல்நீர் ஏன் நீலநிறமாகக் காட்சியளிக்கிறது என்ற வினா எழுந்தது. அவ்வினா அவரை உறங்கவிடவில்லை. இங்கிலாந்து பயணம் முடிந்து இந்தியா திரும்பினார். பிறகு பாதரச ஆவி விளக்கு, பென்சீன் மற்றும் நிறமாலைக் காட்டி ஆகியவற்றின் உதவியுடன் தமது ஆய்வைத் தொடங்கினார்.

ஆய்வின் முடிவில் 1928 பிப்ரவரி 28ஆம் நாள் “இராமன் விளைவு” என்னும் தமது கண்டுபிடிப்பை வெளியிட்டார். இக்கண்டுபிடிப்பு இந்தியாவிற்கு அறிவியலுக்கான முதல் நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது. அவர் தமது கண்டுபிடிப்பை வெளியிட்ட பிப்ரவரி 28 ஆம் நாளை நாம் ஆண்டு தோறும் “தேசிய அறிவியல் நாள்” எனக் கொண்டாடி மகிழ்கிறோம். அவர் யார் தெரியுமா? அவர்தான் சர்.சி.வி.இராமன்.

**வினாக்கள்**

**1. இராமன் விளைவைக் கண்டறிந்தவர் யார்?**

**<u>விடை</u>:** சர்.சி.வி.இராமன்

**2. இராமன் அவர்களுக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்த கேள்வி எது?**

அ) கடல் நீர் ஏன் கறுப்பாகக் காட்சியளிக்கிறது?
ஆ) கடல் நீர் ஏன் நீல நிறமாக இல்லை?
இ) கடல் நீர் ஏன் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது?
ஈ) கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது?

**<u>விடை</u>:** இ) கடல் நீர் ஏன் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. தேசிய அறிவியல் நாள் எப்போது கொண்டாடப்படுகிறது? ஏன்?**

தேசிய அறிவியல் நாள் பிப்ரவரி 28 ஆம் நாள் கொண்டப்படுகிறது.

**4. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பிடுக.**

சர்.சி.வி. இராமனின் அறிவியல் கண்டுபிடிப்பு

## கட்டுரை

**கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

### அறிவியல் ஆக்கங்கள்

முன்னுரை, வளர்ச்சி, புதுப்புது கருவிகள், வியத்தகு செயல்கள், தீமைகள், முடிவுரை

**முன்னுரை**

காலை மலர்கிறது, கண் விழிக்கிறோம், காப்பியுடன் காலைச் செய்தித் தாளைப் படிக்கிறோம். வானொலியின் இனிய ஒலியில் நம்மை மூழ்கச் செய்கிறது. உலகளாவும் அலைகிறது நம் அறிவு.

**வளர்ச்சி :**

புனல் மேல் நடக்கலாம், கனல் மேல் இருக்கலாம் என்பர் தாயுமானவர். இது இன்று உண்மையாகிவிட்டது. நீர் மேல் நடப்பது மட்டுமன்று ஓடவும் செல்கிறோம். வானத்தை ஊடுருவிச் சென்று, சந்திர மண்டலத்திற்கு சரித்திரம் படைக்கும் சாகசக்காரர்களாக மாறிவிடுகிறோம்.

**புதுப்புது கருவிகள் :**

மனிதத் இதயத்தை எடுத்து வெளியில் வைத்துவிட்டு அதனின் இடர்பாடுகளைச் சரிசெய்து மீண்டும் பொருத்திடும் வகை கருவி மனித உடல் முழுவதும் படம் பிடிக்கும் கருவி கண்டங்கள் கடல்கள் தாண்டி மாநிலம், மாவட்டம் வாழும் மக்களிடம் கணப்பொழுதில் நிகழ்வுகளை கொண்டு சேர்க்கின்றனர். விண்ணிலே தொழிற்சாலை அமைத்து வியக்க வைத்துக் கொண்டுள்ளனர்.

**வியத்தகு செயல்கள் :**

கற்பதற்கு நூலன்றி மனத்தில் இருந்த வேண்டிய காலம் ஒன்று, ஆனால் இன்று கற்க வேண்டிய நூல்கள் அனைத்தும் கையடக்கமாக வந்துவிட்டது. மனிதனுக்குப் பதிலாக மனிதன் செய்யக் கூடியவற்றை இயந்திர மனிதன் (ரோபோ) செய்துள்ளான். முக அழகு முதல் முக்கிய உறுப்புகள் வரை செயற்கையாய் வைத்து, மனிதன் நாளும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறான்.

**தீமைகள் :**

கதிர்வீச்சுகளால் பறவையினங்கள் அழிகின்றன. மனிதர்களுக்கு பல்வேறு வித நோய்கள் ஏற்படுகின்றன. பல்லாயிரம் பேர் இணைந்து செல்கின்ற வேலையை, கருவிகள் செய்து முடிப்பதால் மக்கள் வேலை வாய்ப்பிழந்து தங்கள் வாழ்விற்கான ஆதாரத்தையும் இழந்து வருகின்றனர்.

**முடிவுரை**

அறிவியல் ஆக்கங்களைக் கண்ட மனிதனின் மூளை வேலை செய்வதைப் போன்று நல்வழியில் பயன்படுத்தி சாதகைளைப் படைத்திட முயல்வோம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## மொழியோடு விளையாடு

**சொல்வளம் பெருக்குக.**

**IV. பின்வரும் தொடர்களில் அடிக்கோடிட்ட சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக**

1. **கம்ப்யூட்டர் துறையில் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.**
   விடை: கணினித்துறையில் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.
2. **காலிங்பெல்லை அழுத்தினான் கணியன்.**
   விடை: அழைப்புமணியை அழுத்தினான் கணியன்.
3. **மனிதர்கள் தங்கள் வேலைகளை எளிதாக்க மிஷின்களைக் கண்டுபிடித்தனர்.**
   விடை: மனிதர்கள் தங்கள் வேலைகளை எளிதாக்க எந்திரங்களைக் கண்டுபிடித்தனர்.
4. **இன்று பல்வேறு துறைகளிலும் ரோபோ பயன்பாட்டிற்கு வந்துள்ளது.**
   விடை: இன்று பல்வேறு துறைகளிலும் எந்திர மனிதர்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

## பகிர்க.

**ரோபோக்கள் கண்டுபிடிப்பினால் ஏற்படும் விளைவுகள் பற்றி விவாதிக்க.**

(ரோபோக்கள்) எந்திர மனிதனுக்கு சில கட்டளைச் செய்திகளை கணினியில் உட்செலுத்தி, அதன் வடிவமைப்பில் செயற்கை அறிவைக் கொண்டு செயல்படுகின்றன.

எந்திர மனிதன் செயல்பட தேவையான மின்வசதி குறையும் போது அனைத்து கடமைகளையும் தவறாக செய்துவிடும். மேலும் தன் உடம்பில் சேமிப்புக் கருவிகளையும் இணைத்திருப்பதால் நம்மைச் சுற்றி நிகழும் அனைத்துக் காரியங்களையும் உணர்ந்து பதிலளிக்கும். மனிதர்கள் சுதந்திரமாக செயல்பட இயலாது.

**V. கலைந்துள்ள எழுத்துகளை முறைப்படுத்துக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | விகண்லம் | - | வி | ண் | க | ல | (ம்) |
| 2 | மத்ருதும்வ | - | ம | ரு | த் | (து) | வ | ம் |
| 3. | அவிறில்ய | - | (அ) | றி | வி | ய | (ல்) |
| 4 | ணினிக | - | (க) | ணி | னி | | |
| 5. | எலால்ம் | - | எ | ல் | (லா) | ம் | |
| 6. | அப்ழைபு | - | அ | ழை | (ப்) | பு | |

**வட்டத்தில் சிக்கிய எழுத்துகளை எடுத்து எழுதுக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ம்) | (து) | (அ) | (ல்) | (க) | (லா) | (ப்) |

**எழுத்துக்களை வரிசைபடுத்தி தமிழக அறிவியல் அறிஞரைக் கண்டுபிடியுங்கள் .....**

விடை: அப்துல்கலாம்.

**VI. வாக்கியத்தை நீட்டி எழுதுக**

(எ.கா) நான் படிப்பேன். (அறிவியல், பாடம், நன்றாக)

நான் பாடம் படிப்பேன்.

நான் அறிவியல் பாடம் படிப்பேன்

நான் அறிவியல் பாடம் நன்றாகப் படிப்பேன்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



1. **அறிந்துகொள்ள விரும்பு (எதையும், காரணத்துடன், தெளிவாக)**
எதையும் அறிந்துகொள்ள விரும்பு.
எதையும் காரணத்தடன் தெளிவாக.
எதையும் காரணத்துடன் தெளிவாக அறிந்துகொள்ள விரும்பு.


2. **நான் சென்றேன். (ஊருக்கு, நேற்று, பேருந்தில்)**
நான் ஊருக்குச் சென்றேன்.
நான் ஊருக்கு நேற்று சென்றேன்.
நான் ஊருக்கு நேற்று பேருந்தில் சென்றேன்.

---

**VII. அடிச்சொல்லுடன் எழுத்துகளைச் சேர்த்துப்புதிய சொற்களை உருவாக்குக**
(எ.கா:) அறி - அறிக, அறிந்து, அறிஞர், அறிவியல், அறிவிப்பு
1. பார், 2. செய், 3. தெளி, 4. படி
அறிந்துபார் அறிஞர் பார் அறிவியல் செய்; அறிவிப்பு படி

---

**மெய் எழுத்து நடுவில் அமையுமாறு சொற்களை உருவாக்கு**
(எ.கா:) கம்பு




நம்பு, நம்பி, வம்பு, தம்பி


---

**VIII. கலைச்சொல் அறிவோம்**

| | | |
|---|---|---|
| செயற்கை நுண்ணறிவு | - | Artificial Intelligence |
| மீத்திறன் கணினி | - | Super computer |
| செயற்கைக்கோள் | - | satellite |
| நுண்ணறிவு | - | Intelligence |

---

IX. **குறுக்கெழுத்துப் புதிர்**






www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**இடமிருந்து வலம்**

1. **அப்துல்கலாமின் சுயசரிதை.**
   **விடை:** அக்னிச் சிறகுகள்
3. **சிந்தித்துச் செயல்படும் தானியங்கி.**
   **விடை:** எந்திரமனிதன்
10. **எந்திரமனிதனுக்கு குடியுரிமை வழங்கிய முதல் நாடு.**
   **விடை:** சவூதி அரேபியா

**வலமிருந்து இடம்**

2. **ஆராய்ச்சி என்பதைக் குறிக்கும் சொல்.**
   **விடை:** ஆய்வு
6. **சதுரங்கப் ----------யில் டீப்புளூ வெற்றி பெற்றது.**
   **விடை:** போட்டியில்
8. **மருந்து என்னும் பொருள் தரும் சொல்**
   **விடை :** ஔடதம்

**கீழிருந்து மேல்**

4. **இந்தியா செலுத்திய ஏவுகணை.**
   **விடை :** அக்னி
5. **தானாகச் செயல்படும் எந்திரம்.**
   **விடை :** தானியங்கி
9. **அப்துல்கலாம் வகித்த ---------- குடியரசுத் தலைவர்.**
   **விடை :** பதவி

**மேலிருந்து கீழ்**

1. **'ரோபோ' என்னும் சொல்லின் பொருள்**
   **விடை:** அடிமை
2. **அகர வரிசையில் அமையும் இலக்கியம்**
   **விடை:** ஆத்திசூடி
7. **'புதுமைகளின் வெற்றியாளர்' என்னும் பட்டம் பெற்ற எந்திர மனிதன்.**
   **விடை:** சோபியா

## மனப்பாடப்பகுதி

### இன்பத்தமிழ்

தமிழுக்கும் அமுதென்றுபேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!

தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

- பாரதிதாசன்

### சிலப்பதிகாரம்

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான் சுரத்தலான்

- இளங்கோவடிகள்

### காணி நிலம்

காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும் - அங்குத்
தூணில் அழகியதாய் - நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும் - அங்குக்
கேணி அருகினிலே - தென்னைமரம்
கீற்றும் இளநீரும்
பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும்

- பாரதியார்

### திருக்குறள்

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

- திருவள்ளுவர்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## திருக்குறள்

### அன்புடைமை

1. அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும்.
2. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.
3. அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.
4. அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.
5. அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.
6. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.
7. என்பு இலதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.
8. அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று.
9. புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.
10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

### விருந்தோம்பல்

1. இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.
2. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற்று அன்று.
3. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.
4. அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.
5. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.
6. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்துஇருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



7. இனைத்துணைத்து என்பதொன்று இல்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.
8. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.
9. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.
10. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

## இனியவை கூறல்

1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.
2. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.
3. முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான்ஆம்
இன்சொ லினதே அறம்.
4. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.
5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணிஅல்ல மற்றும் பிற.
6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.
7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.
8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையுள் இன்பம் தரும்.
9. இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.
10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.

## பயனில சொல்லாமை

1. பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.
2. பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல
நட்டார்கண் செய்தலின் தீது.
3. நயனிலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை.

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. நயன்சாரா நன்மையின் நீங்கும் பயன்சாராப்
பண்புஇல்சொல் பல்லார் அகத்து.
5. சீர்மை சிறப்போடு நீங்கும் பயன்இல
நீர்மை உடையார் சொலின்.
6. பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்.
7. நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.
8. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.
9. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்.
10. சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்

**ஈகை**

1. வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்றும் எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.
2. நல்ஆறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்எனினும் ஈதலே நன்று.
3. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள.
4. இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு.
5. ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.
6. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.
7. பாத்துஊண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.
8. ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்துஇழக்கும் வன்க ணவர்.
9. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.
10. சாதலின் இன்னாதது இல்லை இனிதுஅதூஉம்
ஈதல் இயையாக் கடை.

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இரண்டாம் பருவம்

## மனப்பாடப் பகுதி

### மூதுரை

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

**- ஔவையார்**

### திருக்குறள்

1. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

2. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு

3. சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல்.

**- திருவள்ளுவர்**

### கடலோடு விளையாடு

விடிவெள்ளி நம்விளக்கு - ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம் - ஜலசா
அடிக்கும்அலை நம்தோழன் - ஜலசா
அருமைமேகம் நமதுகுடை - ஜலசா
வெண்மணலே பஞ்சுமெத்தை - ஜலசா
விண்ணின்இடி காணும்கூத்து - ஜலசா

பாயும்புயல் நம்ஊஞ்சல் - ஜலசா
பனிமூட்டம் உடல் போர்வை - ஜலசா
காயும்கதிர்ச் சுடர்கூரை - ஜலசா
கட்டுமரம் வாழும்வீடு - ஜலசா
மின்னல்வரி அரிச்சுவடி - ஜலசா
பிடிக்கும்மீன்கள் நம்பொருள்கள் - ஜலசா
முழுநிலவே கண்ணாடி - ஜலசா
மூச்சடக்கும்நீச்சல் யோகம் - ஜலசா
தொழும்தலைவன் பெருவானம் - ஜலசா
துணிவோடு தொழில்செய்வோம் - ஜலசா

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பருவம் - 2

## இயல் 1

## கண்ணெனத் தகும்
## கவிதைப் பேழை
## மூதுரை

### தொகுதி – I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக – பாட வினாக்கள்**

1. மாணவர்கள் நூல்களை .......... கற்க வேண்டும்.
   அ) மேலோட்டமாக ஆ) மாசுற
   இ) மாசற ஈ) மயக்கமுற **விடை : இ) மாசற**

2. இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...........
   அ) இடம் + மெல்லாம் ஆ) இடம் + எல்லாம்
   இ) இட + எல்லாம் ஈ) இட + மெல்லாம் **விடை : ஆ) இடம் + எல்லாம்**

3. மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........
   அ) மாச + அற ஆ) மாசு + அற
   இ) மாச + உற ஈ) மாசு + உற **விடை : ஆ) மாசு + அற**

4. குற்றம் + இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ...........
   அ) குற்றமில்லாதவர் ஆ) குற்றம் இல்லாதவர்
   இ) குற்றமல்லாதவர் ஈ) குற்றம் அல்லாதவர் **விடை : அ) குற்றமில்லாதவர்**

5. சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ...........
   அ) சிறப்பு உடையார் ஆ) சிறப்புடையார்
   இ) சிறப்படையார் ஈ) சிறப்பிடையார் **விடை : ஆ) சிறப்புடையார்**

### கூடுதல் வினாக்கள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மூதுரையில் .............. பாடல்கள் உள்ளன. **விடை : 31**
2. மன்னன் என்பதன் பொருள் ............. **விடை : அரசன்**
3. தேசம் என்பதன் பொருள் .............. **விடை : நாடு**
4. மூதுரையை இயற்றியவர் ............... **விடை : ஔவையார்**
5. மூதுரை ............ கருத்துக்களைக் கூறும் நூல். **விடை : அற**

**III. சொல்லும் பொருளும்**

| | | |
|---|---|---|
| மன்னன் | - | அரசன் |
| மாசற | - | குறை இல்லாமல் |
| சீர்தூக்கின் | - | ஒப்பிட்டு ஆராய்ந்து |
| தேசம் | - | நாடு |
| சிறப்பு | - | மேன்மை, மதிப்பு |
| இடம் | - | இருப்பிடம் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**IV. பிரித்தெழுதுக.**

மாசற = மாசு + அற

சிறப்புடையன் = சிறப்பு + உடையன்

சிறப்பில்லை = சிறப்பு + இல்லை

இடமெல்லாம் = இடம் + எல்லாம்

**V. எதிர்ச்சொல்**

மாசற × மாசுற

கற்றோன் × கல்லாதவன்

சிறப்பு (உயர்வு) × தாழ்வு, சிறப்பில்லாத

## தொகுதி – II

### குறு வினாக்கள் – பாட வினாக்கள்

**1. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?**

➢ மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு.

➢ கல்வி கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு

### கூடுதல் வினாக்கள்

**2. மூதுரை – குறிப்பு வரைக.**

➢ மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள்.

➢ சிறந்த அறிவுரைகளைக் கூறுவதால் இந்நூல் மூதுரை எனப்பெயர் பெற்றது.

➢ இந்நூலில் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன.

**3. ஔவையார் எழுதிய நூல்கள் யாவை?**

➢ ஆத்திசூடி ➢ கொன்றைவேந்தன் ➢ நல்வழி ➢ மூதுரை

### II. சிந்தனை வினா

**1. கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகளைப் பட்டியலிடுக.**

➢ கல்லாதவர் எல்லாராலும் இகழப்படுவர். கற்றவரே கண்ணுடையவர். கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்களை உடையவராவார்.

➢ கல்வி கற்ற மகனையே பெற்றோர் பாராட்டுவர்; மதிப்புக் கொடுப்பர்; கல்லாதாரை இழிந்தவர் என வள்ளுவர் கூறுகிறார்.

➢ கற்காத ஒருவனது சுயமதிப்பு அவன் கற்ற அறிஞர் பெருமக்களுடன் உரையாடத் தொடங்கும்போது தளர்ந்து போகும்.

➢ கல்லாதவர் இருக்கிறார் என்னும் அளவினரே அல்லாமல் எந்தப் பயனும் இல்லாத களர் நிலத்தைப் போல் பயனில்லாதவர் ஆவார்.

➢ கல்வி கற்காதவனிடம் உள்ள செல்வம் துன்பம் தருவதாக அமையும்.

➢ விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்.

➢ அறிவு துலங்குவதற்குக் காரணமான நூல்களைக் கற்காதவர்களோடு மற்றவர்களை ஒப்பிடும் போது விலங்குகளோடு மக்களை ஒப்பிடுவது ஆகும்.

➢ கல்வி கற்காத பெண்கள் களர்நிலம். அதில் புல் விளைந்திடலாம். நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?**

- மன்னனையும், குறை இல்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்துப் பார்த்தால் மன்னனை விடக் கற்றவரே சிறந்தவர்.
- கல்வி கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு.

## கூடுதல் வினாக்கள்

**2. ஆசிரியர் குறிப்பு தருக.**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் பெயர் | - | ஔவையார் |
| எழுதிய நூல்கள் | - | ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி |
| சிறப்பு | - | ஆத்திசூடியில் 109 அறிவுரைகளைக் கூறியுள்ளார். |
| சிறப்பான தொடர்கள் | - | அறம் செய்ய விரும்பு, அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும், திரைகடல் ஓடியும் திரவியம் தேடு, சாதி இரண்டொழிய வேறில்லை |

**3. குறிப்பு தருக :**

- முதுமை + உரை = மூதுரை
- மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள்.
- சிறந்த அறிவுரைகளைக் கூறுவதால் இந்நூல் மூதுரை எனப் பெயர் பெற்றது.
- இந்நூலில் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன.

## III. கற்பவை கற்றபின்

**1. கல்வியே அழியாச் செல்வம் என்ற தலைப்பில் பேசுக.**

- 'கண்ணுடையர் என்போர் கற்றோர்' என்று திருவள்ளுவர் கூறுகிறார். கல்வியைப் போலச் சிறந்த செல்வம் எதுவுமில்லை. இவ்வுலகில் நாம் சேர்க்கக் கூடிய செல்வங்கள் எல்லாம் குறைந்து போகும். நம்மை விட்டுச் சென்றுவிடும்.
- ஆனால் கல்விச் செல்வமானது நம்மைவிட்டுச் செல்லாது நம்முடனேயே இருக்கும். என்றும் குறையாது வளர்ந்து கொண்டே போகும். யாராலும் திருட முடியாத செல்வம் கல்வி.
- தோண்டத் தோண்டக் கிணற்றில் நீர் சுரப்பது போலக் கற்கக் கற்க கல்வி என்ற செல்வம் வளர்ந்து கொண்டே போகும். கிணற்றில் உள்ள நீர் எல்லோருக்கும் பயன்படுவதைப் போல ஒவ்வொருவரும் பெற்றிருக்கக் கூடிய கல்வியானது மற்றவர்களுக்கும் பயன்படும். பிறரையும் வாழ வழிகாட்டும்
- கற்றவருக்குத் தன் நாடும் ஊரும் போலவே வேறு எதுவாயினும் நாடாகும்; ஊராகும். ஆகையால் ஒருவன் சாகும் வரை கல்வியைக் கற்கலாம்.
- அழிவில்லாத சிறந்த செல்வம் என்பது கல்விச் செல்வமே. கல்வி தவிர மற்றப் பொருட்செல்வங்கள் எல்லாம் அழியக் கூடியவை. ஆகையால் அவை சிறப்புடைய செல்வம் ஆகா.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. கல்வி பற்றிய பழமொழிகள் அல்லது பாடல் அடிகள்.**

1. கற்கை நன்றே கற்கை நன்றே
   பிச்சைப் புகினும் கற்கை நன்றே
2. ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
   எழுமையும் ஏமாப் புடைத்து - திருக்குறள்.
3. நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்லவா? பொல்லாக் குணம் போக்க.
4. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்.
5. மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை- முதுமொழிக்காஞ்சி
6. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே - புறநானூறு.
7. அறிவு மனிதரை மனிதத் தன்மையிலிருந்து உயர்த்துவதாக இருக்க வேண்டும். அறிவு இதயத்தோடு கலக்க வேண்டும். - சுவாமி விவேகானந்தர்.
8. விலை கொடுத்து வாங்கிப் படியுங்கள் அல்லது இரவல் வாங்கியாவது படியுங்கள் - டாக்டர் அம்பேத்கர்.

# இயல் 1

## கவிதைப் பேழை

# துன்பம் வெல்லும் கல்வி

**ஆசிரியர் : பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்**

### தொகுதி – I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக – பாட வினாக்கள்**

1. மாணவர் பிறர் ........ நடக்கக் கூடாது.

   அ) போற்றும் படி  ஆ) தூற்றும் படி  இ) பார்க்கும்படி  ஈ) வியக்கும்படி

   **விடை : ஆ) தூற்றும் படி**

2. நாம் .......... சொல்படி நடக்க வேண்டும்.

   அ) இளையோர்  ஆ) ஊரார்  இ) மூத்தோர்  ஈ) வழிப்போக்கர்

   **விடை : இ) மூத்தோர்**

3. கைப்பொருள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) கையில் + பொருள்  ஆ) கைப் + பொருள்  இ) கை + பொருள்  ஈ) கைப்பு + பொருள்

   **விடை : இ) கை + பொருள்**

4. மானம் + இல்லா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   அ) மானம் இல்லா  ஆ) மானமில்லா

   இ) மானமல்லா  ஈ) மானம்மில்லா  **விடை : ஆ) மானமில்லா**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## II.சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. **மனமாற்றம் :** திருடர் தம் திருட்டுத் தொழிலை விட்டு **மனமாற்றம்** பெற்றுத் திருந்தி வாழ வேண்டும்.
2. **ஏட்டுக்கல்வி :** வெறும் **ஏட்டுக்கல்வி** மட்டும் வாழ்க்கைக்குப் பயன்படாது.
3. **நல்லவர்கள் :** என் அப்பா அம்மா **நல்லவர்கள்.**
4. **சோம்பல் :** ஒருபோதும் நாம் **சோம்பல்** கொள்ளாமல் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்.

## ஒரு மதிப்பெண் வினா – கூடுதல் வினாக்கள்

### III. கோடிட்ட இடங்களை நிரப்புக:–

1. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பிறந்த ஊர் ............ **விடை : செங்கப்படுத்தான் காடு**
2. பட்டுக்கோட்டையார் ........... கவிஞர் எனப்போற்றப்படுகிறார். **விடை : மக்கள்**
3. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பிறந்த ஆண்டு .......... **விடை : 1930**
4. வான் என்பதன் பொருள் ................ **விடை : வானம்**
5. மேதைகள் என்பதன் பொருள் ............ **விடை : அறிஞர்கள்**
6. நெறி என்பதன் பொருள் ............ **விடை : வழி**

### IV. சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| தூற்றும் படி | - | இகழும் படி |
| மூத்தோர் | - | பெரியோர் |
| மேதைகள் | - | அறிஞர்கள் |
| மாற்றார் | - | மற்றவர் |
| நெறி | - | வழி |
| வற்றாமல் | - | அழியாமல் |
| ஏடு | - | நூல் |
| திறன் | - | வலிமை |
| முகடு | - | உச்சி |
| வான் | - | வானம் |

### V. பிரித்தெழுதுக.

| | | |
|---|---|---|
| மானமில்லா | = | மானம் + இல்லா |
| குணமிருந்தால் | = | குணம்+இருந்தால் |
| பெறுவதற்கான | = | பெறுவதற்கு + ஆன |
| கைப்பொருள் | = | கை + பொருள் |

### VI. எதிர்ச்சொல்

| | | |
|---|---|---|
| நல்லவர்கள் | × | தீயவர்கள் |
| தூற்றும் | × | போற்றும் |
| மூத்தோர் | × | இளையோர் |
| கோழை | × | வீரன் |
| துன்பம் | × | இன்பம் |
| வெல்லும் | × | தோற்கும் |
| சோம்பல் | × | சுறுசுறுப்பு |
| அறிவு | × | அறியாமை |
| வளர்ச்சி | × | தளர்ச்சி |
| வெற்றி | × | தோல்வி |
| பெருமை | × | சிறுமை |
| மேதை | × | பேதை |
| பிறந்த | × | இறந்த |
| புகழ் | × | இகழ் |
| வாழ்ந்திட | × | தாழ்ந்திட |
| உயர்வு | × | தாழ்வு |

## தொகுதி – II

### குறு வினாக்கள் – பாட வினாக்கள்

**1. நாம் யாருடன் சேரக் கூடாது?**

நாம் தன்மானம் இல்லாத கோழைகளுடன் சேரக்கூடாது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. எதை நம்பி வாழக் கூடாது?**

பிறர் உழைப்பை நம்பி வாழக் கூடாது.

**3. நாம் எவ்வாறு வாழ வேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்?**

➢ பிறருடன் வம்பு செய்யும் வழக்கம் இருந்தால் அதை விட்டுவிட்டு வானைத்தொடும் அளவுக்கு அறிவை வளர்த்துக் கொண்டு, மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின் படி வாழ வேண்டும்.

➢ அதன்மூலம் வெற்றிகளையும் விருதுகளையும் பெருமையையும் பெற்று, பெற்ற தாயின் புகழும் நம் தாய்நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழ வேண்டும்.

**4. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?**

மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின் படி வாழ்ந்தால் பெருமை பெறலாம்.

## கூடுதல் வினாக்கள்

**1. எவற்றை மீறக் கூடாது? எதிலிருந்து மாறக் கூடாது?**

➢ பெரியோர் கூறும் அறிவுரைகளை மீறக் கூடாது.

➢ பிறரிடம் பழகும் முறையிலும் பேசும் முறையிலும் பண்புநெறி மாறக்கூடாது.

**2. எப்படி நடக்கக் கூடாது? எப்படி வளரக் கூடாது?**

➢ நம் நாட்டின் நெறி (வழிமுறைகள்) தவறி நடக்கக் கூடாது.

➢ நல்லவர்கள் குறை சொல்லும்படி வளரக் கூடாது.

**3. ஆசிரியர் குறிப்பு :**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் பெயர் | - | பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் |
| பிறந்த இடம் | - | செங்கப்படுத்தான் காடு |
| சிறப்புப் பெயர் | - | மக்கள் கவிஞர் |
| பிறப்பு | - | 13.04.1930 |
| இறப்பு | - | 18.10.1959 |
| சிறப்பு | - | பொதுவுடைமைச் சிந்தனைவாதி |
| சிறப்பு கவிதை | - | செய்யும் தொழிலே தெய்வம் |
| | - | அந்தத் திறமை தான் நமது செல்வம் |

➢ எளிய தமிழில் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை வலியுறுத்திப் பாடியவர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

➢ திரையிசைப் பாடல்களில் உழைப்பாளிகளின் உயர்வைப் போற்றியவர்.

## II. சிந்தனை வினா

**1. நீங்கள் படித்து என்னவாக விரும்புகிறீர்கள்? ஏன்?**

➢ நான் படித்து ஆசிரியராக விரும்புகிறேன். ஏனெனில் அதுவே சிறந்த பணி.

➢ “ஆசிரியப் பணியே அறப்பணி!
அதற்கே உன்னை அர்ப்பணி!!” என்பது ஆன்றோர் வாக்கன்றோ!

➢ பட்டி தொட்டி பாமர மக்களெல்லாம் கல்வி அறிவைப் பெறவும், “கல்லாமையை இல்லாமை ஆக்கவும்,



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அகவிருள் அகற்றி அறிவொளி ஏற்றிடவும்" - சிறந்த பணி ஆசிரியப் பணியே!

➢ அதற்காகவே நான் ஆசிரியராகிப் பணிபுரிந்திடப் பேராவலாய் உள்ளேன்.

## III. கற்பவை கற்றபின்

**1. நூலகத்திற்குச் சென்று பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் எழுதிய வேறு பாடல் ஒன்றை எழுதி வருக.**

சின்னப்பயலே! சின்னப்பயலே! சேதி கேளடா! நான் சொல்லப்போற வார்த்தையை நல்லா எண்ணிப் பாரடா - நீ
எண்ணிப்பாரடா!

1. ஆளும் வளரணும்! அறிவும் வளரணும்
அது தாண்டா வளர்ச்சி! - உன்னை
ஆசையோடு ஈன்றவளுக்கு
அதுவே நீ தரும் மகிழ்ச்சி!

2. நாளும் ஒவ்வொரு பாடம் கூறும்
காலம் தரும் பயிற்சி - உன்
நரம்போடு தான் பின்னி வளரணும்
தன்மான உணர்ச்சி

3. மனிதனாக வாழ்ந்திட வேண்டும்
மனதில் வையடா! - தம்பி
மனதில் வையடா!
வளர்ந்து வரும் உலகத்துக்கே நீ
வலது கையடா! - நீ
வலது கையடா!

---

**2. 'ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி இல்லை' என்னும் தலைப்பில் பேசுக.**

➢ ஆம் ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி இல்லை 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' அன்றோ!

➢ ஏட்டளவில் எழுதியோ, படித்தோ அல்லது மனப்பாடம் செய்தோ கல்வி கற்பது மட்டும் படிப்பு ஆகாது.

➢ கல்வி என்பது 'பட்டறிவு' என்னும் 'அனுபவ அறிவாகும்' தெளிந்த கல்வியறிவைப் பெறுவதாகும்.

---

**3. சான்றாகப் பெருந்தலைவர் காமராசர் கல்விக்குத் தந்தை. அவர் பிறந்த நாளைக் 'கல்வி வளர்ச்சி நாள்' என்று நாம் பள்ளிகளில் கொண்டாடுகிறோம். ஏன்?**

➢ பட்டி - தொட்டி எல்லாம் - ஏழை - எளிய பாமரர் யாவரும் கல்வி கற்க வேண்டும். கல்லாமையை இல்லாமை ஆக்குவோம் என்பதற்கேற்ப ஆணிவேராக உறுதியாக இருந்தார் காமராசர்.

➢ அவர் படிக்காத மேதை அன்றோ? எப்படி? தந்தையைச் சிறுவயதில் இழந்ததால் பள்ளிப்படிப்பு நின்று போனது. ஏட்டுக்கல்வி இல்லை அவரிடம்.

➢ ஆனால் சிறந்த அறிவும் - அனுபவமும் அவரிடம் இயல்பாகவே இருந்தது. புவியியல் அவர் படிக்கவில்லை. எனினும் நாட்டில் எங்கெல்லாம் ஏரி, குளங்கள், ஆறுகள், பாசன வசதிகள் எல்லாம் தெரிய அவருக்கு அத்துப்படி. பட்டறிவு எனும் அனுபவத்தால் கற்றுக்கொண்டார். அறிவைப் பெற்றுக் கொண்டார். நாடாளும் முதலமைச்சர் ஆனார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள் :**

1. கல்வியின் சிறப்பை உணர்ந்துள்ளேன்.
2. தொடர்ந்து கல்வி கற்பேன்.
3. கல்வியால் எனது குறிக்கோளை அடைவேன்.
4. கல்வியால் சிறந்தவர்களை என் முன்னோடிகளாகக் கொள்வேன்.
5. புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வேன்.

## கலைச்சொல் அறிவோம்

கல்வி - Education
தொடக்கப் பள்ளி - Primary School
மேல்நிலைப் பள்ளி - Higher Secondary School
நூலகம் - Library
மின்படிக்கட்டு - Escalator
மின்தூக்கி - Lift
மின்னஞ்சல் - E - Mail
குறுந்தகடு - Compact Disk (CD)
மின்நூலகம் - E – Library
மின்நூல் - E - Book
மின் இதழ்கள் - E – Magazine

## இணையத்தில் காண்க.

**1. ஔவையார் என்ற பெயரில் பலர் இருந்திருக்கின்றனர் என்ற செய்தியை இணையத்தில் தேடுக.**

1. சங்க கால ஔவையார் அதியமானுக்கு நெல்லிக்கனி ஈந்தவர்.
2. பாரி மகளிர் - அங்கவை, சங்கவை இருவருக்கும் மணம் முடித்து வைத்தவர் ஔவையார்.
3. அறநூல்களாகிய ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி ஆகிய நூல்களை எழுதிய ஔவையார்.
4. சமயநூல் எழுதிய ஔவையார். நூல் விநாயகர் அகவல்.
5. கதையில் வரும் புலவர் ஔவையார் கதை தமிழறியும் பெருமான்.
6. சிற்றிலக்கியப் புலவர் பந்தன் அந்தாதி.

**2. கல்வியின் சிறப்புக் குறித்துக் கூறியுள்ள கல்வியாளர் சிலரின் பெயர்களை இணையத்தில் தேடி பட்டியலிடுக.**

1. திருவள்ளுவர்
2. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
3. காந்தியடிகள்
4. நேருஜி
5. காமராசர்
6. ஈ.வெ.ரா. பெரியார்
7. அப்துல்கலாம்

**3. கல்வியால் உயர்ந்தோரின் பெயர்களை இணையத்தில் தேடிப் பட்டியலிடுக.**

1. டாக்டர் அம்பேத்கர்
2. டாக்டர் இராதா கிருஷ்ணன்
3. அணு விஞ்ஞானி அப்துல்கலாம்
4. சுந்தர்பிச்சை
5. டாக்டர் கே. சிவன்,
6. மயில்சாமி அண்ணாதுரை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net